
# திருக்கோயில்

செப்டம்பர் 1992 விலை ரூ. 3





அருள்மிகு வடபழநியாண்டவர் ஆலயத்தில் 15-8-92 சுதந்திரத் திருநாள் அன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு பொதுப்பணித்துறைஅமைச்சர் திருமிகுஎஸ்.கண்ணப்பன்,பி.எஸ்சி.,பி.எல். அவர்கள்இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு எஸ். ஜெயகுமார், பி.ஏ., சென்னை துணை ஆணையாளர் திருமிகு தி. ஜெயராமன், பி.ஏ.,பி.எல்., ஆலய நிர்வாக அதிகாரி திரு தி. உதயராஜ். பி.ஏ. ஆகியோர் உடன் உள்ளனர்.

முகப்பு:
ஸ்ரீ வல்லபை விநாயகர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

மாலை. 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கீரச ஆண்டு புரட்டாசி செப்டம்பர் 1992 விலை ரூ. 3-00 | மணி: 9

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் உள்ளம்
— திருமந்திரச்செம்மல்

பாம்பன் சுவாமிகள் அருளிய பஞ்சாமிர்த வண்ணம்
— பேராசிரியர் டாக்டர் ப. ராமன்

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

வாழ்வில் அமைதியும் வெற்றியும் பெற வாரீர்
— யோகிராஜ் வேதாத்திரி மகரிஷிகள்.

சித்திரபாரதம்
— செவ்வேள்

முருகர் அதிசயக் கோலங்கள்
— கோயிற்கலைச் செல்வர் தி. இராசமாணிக்கம்

சொர்க்கம்
— டாக்டர் பொன். சௌரிராஜன்

ஆடல் காணீரோ, திருவிளையாடல் காணீரோ,
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

கீதைக் குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்.

வாசகர் எண்ணங்கள்

அருளாளர்களின்

# அருள் அனுபவம்



திருமந்திரச் செம்மல்
டி.வி. வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.



'திருமந்திரச் செம்மல்'
**திருமிகு டி.வி வெங்கட்டராமன்**, ஐ.ஏ.எஸ்.

(15)

ஒரு காலத்தில் பிரம்மனும் திருமாலும் தங்களுடைய வலிமையால் செருக்கடைந்தார்கள். ஆணவ மலம் அவர்களை ஆட்டி வைத்தது. அறியாமை என்னும் இருளில் முழுகிக் கிடந்தார்கள். அவர்களிடையே யார் பெரியவர் என்கின்ற போட்டி உண்டாயிற்று. விவாதம் தொடங்கியது. விவாதம் முற்றிப் போரில் முடிந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பரம்பொருளாகிய சிவபெருமான் அவர்கள்முன் ஓர் அனற்பிழம்பாய்க் காட்சியளித்தான். அந்தத் தீப்பிழம்பு ஆகாயத்திலும் எல்லா அண்டங்களிலும் பரவி நின்றது. ''நானே கடவுள், நானே கடவுள்'' என்று போர்புரிந்த பிரம்மனும் திருமாலும் அந்தச் சோதிப் பிழம்பைப் பார்த்து அதனுடைய அடியையும், முடியையும் காண்பவர்களே அவர்களில் முதல்வராவர் என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆணவ மிகுதியால் தங்களை முழுமுதற் கடவுள் என்று நினைத்திருந்ததை திருமூலர் 'பேதைமை' என்று விளக்குகின்றார். திருமால் வராக வடிவம் கொண்டு, நிலத்தைப் பிளந்து பல்லாயிரம் ஆண்டுகளாக பாதாளத்தில் பல பாகங்களுக்குச் சென்று அந்தச் சோதிப் பிழம்பின் அடியைக் காண முற்பட்டான். கடைசியில் திருமாலுக்குத் தோல்வியே கிட்டியது. தான் தோற்றதாக திருமாலும் ஒப்புக்கொண்டான். திருமால் செல்வத்திற்கு இருப்பிடம். ஆகவே, செல்வத்தால் மட்டும் இறை அனுபவத்தை அடைய முடியாது. இறைவனைப் பெற முடியாது. பிரம்மனோ அன்னப்பறவை உருவம் எடுத்து பல்லாயிரம் ஆண்டுகள் அந்தச் சோதிப் பிழம்பின் முடியைக் காண வேண்டும் என்கிற நோக்கத்துடன் முடியை நோக்கிப் பறந்து கொண்டே இருந்தான். ஆயினும் அந்த முடியைக் காணவில்லை. முடியைக் காணாதவன் தனது இயலாமையை ஒப்புக்கொண்டிருக்கலாமே? ஆணவ மலத்தால் கட்டுப்பட்டு, உண்மை அறிவு மறைக்கப்பட்ட நிலையில் அவன் இதைச் செய்யவில்லை. அவனுடைய மனதில் இருந்த ஒரே ஆசை திருமாலுக்கு முன் தான் சாதித்துவிட வேண்டும் என்பதே. எனவே தான் முடியை கண்டுவிட்டதாக பிரம்பனே பொய் கூறினான். பிரம்மன் கல்விக்கும், நூல் அறிவுக்கும் இருப்பிடம். மிகுந்த கல்வி கற்றவர்கள், நூல் அறிவினால் ஓங்கியவர்கள் தத்துவங்களை கரைத்துக் குடித்துவிட்டு சில நேரங்களில் தாங்கள் சொன்னதுதான் சரி என்று பொய்யாகக்கூட சாதிப்பது உண்டு. ஆனால், இறைவனை இப்படியெல்லாம் பொய் சொல்லி அடைந்துவிட முடியுமா?

''அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்; மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண்டேன் என்றயன் பொய்மொழிந்
தானே''
(திருமந்திரம்... 88)

பிரம்மன் பொய் கூறியது சிவபெருமானுக்குப் பொறுக்கவில்லை.



அக்னி தம்பத்தைப் பிளந்து கொண்டு சிவபெருமான் உக்கிரரூபத்துடன் காட்சியளித்தான். பிரம்மனுக்கு எங்கும் கோயில் உண்டாகாதவாறு சபித்தான். பிரம்ம தேவன் பதை பதைத்து, அஞ்சி மன்னிப்புக் கேட்டான். திருமாலும் பிரம்மனும் மீண்டும் மீண்டும் சிவ பெருமானுடைய பெருமையைப் பாடித் துதித்து, பூசித்து வழிபட்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று இறைவன் மக்கள் வழிபாட்டுக்குரிய இலிங்க வடிவமாகக் காட்சியளித்தான். இதுவே இலிங்கத் தோற்றத்திற்கு மூலமென்று இலிங்க புராணம் விளக்கிக் கூறுகின்றது. இதைத்தான் 'திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடி'' என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

''அரனார் அழலுருவாய் அங்கே
அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ''

என்பதும் திருவாசகமாகும்.

சேக்கிழாரும் இந்த இலிங்கப் புராண வரலாற்று உண்மையை

'தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான்
எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாய கருவிலங்கும்பறவையுமாய்எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த
படிவிரித்தார்''

என்று விளக்கியுள்ளார்.

இறைவன் எங்கும் நிறைந்தவன். சர்வ வியாபி. அணுவிற்கு அணுவாயும், அப்பாலுக்கு அப்பாலாயும் நிற்பவன். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பார் தாயுமானவர். ''அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்தது எது?'' என்பதும் அவருடைய திருவாக்காகும்.

எண்ணிய எலலாவற்றையும், விரும்பியது எலலாவற்றையும்அளிக்கத்தக்க அருள்நிறைந்த ஒளியே அருட்பெரும் சோதியாகும் என்று வள்ளலார் பாடுகின்றார்.

'எனைத்தும் துன்பிலா இயல்பளித்து எண்ணிய அனைத்தும் தரும்சபை அருட்பெருஞ் சோதி'

ஆயினும் வெறும் செல்வத்தாலும், கல்வி அறிவாலும் இறைவனைப் புரிந்து கொள்ள இயலாது. நூல்களைப் படித்து, சாத்திரங்களைப் பேசி இறைவனைக் கண்டுகொள்ளுதலும் கடினம். தர்க்கவாதங்களும், ஆராய்ச்சிகளும் நம்மை இறைவனிடம் சேர்த்துவிடாது. இறை அனுபவம் என்பது இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. இறைவன் எப்பொழுதும் சுடர்விட்டுக் கொண்டே உள்ளான். அவனைப் புரிந்து கொள்ள வேறுவிதமான வழிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்டார் திருஞானசம்பந்தர்;

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள்
சோதி;
மாதுக்கம் நீங்க லுறுவீர், மனம்பற்றி வாழ்மின்

திருநாவுக்கரசர் இறைவனை 'சொற்றுணை வேதியன் சோதி வானவன்' என்று குறிப்பிடுகின்றார்.

எனவே புராணங்களிலிருந்தும் அருளாளர்களுடைய திருவாக்கிலிருந்தும் இறைவன் சோதிமயமானவன் என்று நன்கு தெரிந்து கொள்ளலாம். இந்தச் சோதியை நாம் எப்படி கண்டு அனுபவிப்பது? நமது உடலானது பூதங்கள், இந்திரியங்கள், புலன்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனகிற நான்கு அந்தக்கரணங்கள் ஆகியவற்றின் சேர்க்கையாகும். இவற்றைக் கொண்டே நாம் அனுபவத்தைப் பெறுகின்றோம். அறிவை வளர்க்கின்றோம், இன்ப துன்பங்களைப் பெறுகின்றோம். இந்தக் கருவிகள் தூல நிலையிலும், சூக்கும நிலையிலும் இயக்கங்களைப் புரிந்து கொண்டே இருக்கின்றன. இந்தக் கருவிகளோடு நமது உயிரானது ஒன்றிப் போயிருப்பதால், இந்தக் கருவிகளால் கிடைக்கும் அனுபவம் உயிரைத் தாக்குகின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவில்லை. உயிரையும், உடலையும் ஒன்றாக நினைத்தே வாழுகின்றோம். உண்மையில் உடலும் அதனைச் சார்ந்த கருவிகளும் சடப்பொருள்களாகும். எல்லா அனுபவங்களையும் உயிரே பெறுகிறது. அந்த அனுபவங்கள் வாயிலாக உயிரே மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுத்து வினைக்கடலை வளர்த்துக்கொள்கின்றது. புறக்காட்சிகளைச் சதா அனுபவித்துக்கொண்டிருக்கும் உயிரானது அகக்காட்சிகளை அறிந்து கொள்ள பொதுவாக முற்படுவது இல்லை. உயிரினுடைய வினைக் கூட்டங்களின் அழுத்தமே இதற்குக் காரணமாகும். புறக்கருவிகள் எப்பொழுதும் புறத்தே சென்று கொண்டிருக்கின்றன. 'கண்ணொன்று பல காணும்; தனைக் காணா' என்பார் திருமூலர். இது உயிருடைய இயல்பாகும். தான் சார்ந்திருக்கும் பொருளையே பற்றி நிற்கும். அந்த நிலையில் பிரபஞ்சம் எங்கும் பரவி நிற்கும் பரம் சுடரைப் பார்ப்பதற்கான தகுதி பெறாததன் காரணத்தால் அந்தப்பரஞ்சுடரை உயிரானது காண்பதில்லை. ஆனால், உண்மையில் இறைவன் எப்படி இருக்கின்றான். அவன் 'நிலமுழு தண்டத்துள் நீளியன்'. மண்ணும் விண்ணும் பரந்து நிற்பவன். பல உடம்புகளாக நிற்கின்றான். அவற்றில் உள்ள உயிர்களுக்குள் உயிராய் நிற்கின்றான். அந்தஉயிர்களின் அறிவு ஒளியாக நிற்கின்றான். தனது எல்லையற்ற பேராற்றலால் சூரிய, சந்திர மண்டலங்களைக் கடந்து, அண்டங்கள் முழுவதும் ஊடுருவ நிற்கின்றான். பிரம்மன், திருமால் போன்றவர்கள் கண்களுக்கு அழல் பிழம்பாகக் காட்சியளிக்கின்றான்.

''ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னஞ்
சேணாய்வா னோங்குந் திருவுரு வே அண்டத்
தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்
தாண்முழு தண்டமு மாகிநின் றானே''

(திருமந்திரம்.....374)

அதாவது, உடலும் உடலைச் சார்ந்த கருவிகளும் பிற பொருள்களை அறிகின்றன. தம்மை அறிந்து கொள்வதில்லை. உயிரானது உடலையும், கருவிகளையும் பயன்படுத்திப் பிற பொருள்களைப் பற்றித் தெரிந்து கொள்கின்றது. தன்னைப் பற்றித் தெரிந்து கொள்வதில்லை. இறைவன் அண்டமெல்லாம் பரந்து உயிருக்கு உயிராயும் நிற்கின்றான். ஆனால், உயிர்கள் தம்முள் இருக்கும் இறைவனைப் பற்றித் தெரிந்து கொள்வதில்லை. இதற்குக் காரணம் இறைவனுடைய மறைப்புச் சக்தியாகிய திரோபவமாகும். இதுவும் இறைவனுடைய அருளினாலேயே நிகழ்கின்றது. இதுவே அறியாமையும் ஆகும். இந்த அறியாமையின் சேர்க்கை காரணமாக உயிருக்குயிராய் நிற்கும் இறைவனைப் பற்றி நாம் உணர்ந்து கொள்ள முற்படுவது இல்லை. உண்மையில் இறைவன் உள்ளத்தினுள்ளேயே நிற்கின்றான். உயிரினிடத்தே சோதியாகப் பிரகாசிக்கின்றான். உயிருக்கும் அவனுக்கும் இடையே சிறிது இடைவெளிகூட கிடையாது. இதை உயிர் உணர்ந்து கொள்வதில்லை. இதற்குக்காரணம் உயிரானது வெளிப்புறப் பொருட்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதுதான். தன்னுள் இருக்கும் இறை உண்மையை அறிந்து கொள்ளாத நிலை அறியாமை எனப்படும்.

''உள்ளத் தொருவனை உள்ளுறுசோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருச்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே''

(திருமந்திரம்..431)

இதுவே உயிர் அனுபவிக்கும் மருள் நிலையுமாகும். இந்த நிலையும் ஓர் இருண்ட நிலைதான். வெளிச்சம் சற்று காணப்படுகின்றது. ஆனால் இந்த வெளிச்சம் விஷய அனுபவங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிலை நீங்கி உயிர் தூய ஒளியிலே தன்னை நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான அருளைப் புரிவதும் இறைவனே ஆவான். பல பிறவிகளைப் பெற்று, பல இன்ப துன்பங்களை அனுபவித்து இறைவனுடைய பேரருளால் உயிர் தன்னுடைய வினைக்கூட்டங்களைக் குறைத்துக் கொள்கின்றது. மலங்களுடைய தன்மை குறைகின்றது. அறிவுதயம் ஏற்படுகின்றது. அப்பொழுது உயிரானது தனது உண்மை நிலையை அறிந்து கொள்கின்றது. தனக்கும் இறைவனுக்கும உள்ள தொடர்பைப் பற்றித் தெரிந்து கொள்கின்றது. அப்பொழுது உயிர் தன்னுள் இறை எனும் சோதியை உணர்ந்து கொள்கின்றது. இதுவே உள்ளத்து இருள் நீங்கிய நிலையாகும். பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் தோன்றி பிரகாசிப்பதன் மூலமாக நாம் பெறும் ஒளியானது புறத்தே உள்ள ஒளியாகும். இந்த ஒளி உள்ளத்தைச் சூழ்ந்துள்ள இருளை நீக்கும் ஆற்றலைப்பெற்றதில்லை. திருவருளே உள்ளத்திற்கான விளக்கத்தைத் தரும்.

''தெருளும் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானும்;
சுருளுஞ் சுடருறு தூவெண் சுடரும்
இருளும் அறநின் றிருட்ட றை யாமே''

(திருமந்திரம்...435)

இந்தத் திருவருளைப் பெற்றவர் திருமூலர், உள்நின்ற சோதியை உணர்ந்தவர். விண்ணில் அமரர்கள் இறைவனை இன்பப் பொருளாக

(இதன் தொடர்ச்சி 31ம் பக்கம்)

தவத்திரு

ஸ்ரீ பாம்பன் சுவாமிகளின்

# பஞ்சாமிருதவண்ணம்

சித்தாந்த வித்தகர் பேராசிரியர் டாக்டர் **ப. இராமன்**

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய முருகன் அருள் நூல்களுள் ஒன்று பரிபூஜன பஞ்சாமிர்தவண்ணம் எனும் நூலாகும். இந்நூலில் பால், தயிர், நெய், சருக்கரை, தேன் என்னும் தலைப்புகளில் 5 பாடல்கள் உள்ளன. இப்பாடல்களின் பொருள் உணர்ந்து கற்று மகிழும் வண்ணம் சித்தாந்தச் செல்வர் பேராசிரியர் டாக்டர் ப. இராமன் அவர்கள் அரிய உரை எழுதி உதவியுள்ளார்கள். வாசகர்கள் படித்து இன்புற வேண்டுகிறோம்.

### 1. பால்வண்ணம்

தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்தனா

தந்தந் தந்தன தந்தானா
தந்தந் தந்தன தந்தானா
தந்தந் தந்தன தந்தானா
தந்தந் தந்தன தந்தானா

தாந்த தந்தனனா தனதாந்த தந்தனனா
தாந்த தந்தனனா தனதாந்த
தந்தனனா
தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தன்தந் தனந்தனா-தனதனதன
தானா.

இலங்கு நன்கலைவிரிஞ்சனோ
டனந்த னுஞ்சத மகன்சதா
வியன் கொடம்பியர் களம்பொனா
குறைந்த புங்கவர்களுங் கெடா

தென்றங் கொன்றைய ணிந்தோனார்
தந்தண் டின்திர ளுஞ்சேயா
மென்றன் சொந்தமினுந்தீதே .
தென்றங் கங்கணி கண்டோயா

தேந்து வன்படைவேல் வலி சேர்ந்த திண்புயமே
யேய்ந்த சண்டகர்கா றொடை மூஞ்சி
கந்தரமோ
டெலும்பு றுந்தலை களுந்து ணிந்திட
வடர்ந்த சண்டைக டொடர்ந்துபே
யெனுங்கு ணுங்குக ணிணங்களுண்டரன்
மகன்பு றருசய மெனுஞ்சொலே
களமிசையெழுமாறே

**பதவுரை :**

இலங்கு - விளங்குகின்ற; நன்கலை - வேதம்; விரிஞ்சனோடு - பிரமனோடு; அனந்தனும்-திருமாலும்; சதமகன்-இந்திரனும்; சதா-எப்போதும்; வியன்கொள்-பெருமைகொள்ளும். தம்பியர்களும்-ஓர் இலட்சத்து ஒன்பது, தம்பிமார்களும்; பொனாடு-வானுலகில்; உறைந்து-வாழ்ந்த, புங்கவர்களும்-தேவர்களும்; கெடாது அழியாது, என்றும்-எக்காலத்தும்; கொன்றை-கொன்றைமலரை அணிந்தனோர்தம்-அணிந்த சிவபெருமானுடைய; தண்டின் திருளும்(தண்டு-சேனை, சேனையின் கூட்டமும்;) சேயாம்-சேய்-குழந்தை முருகனாகிய; என்றன்-என்னுடைய சொந்தம்-சொந்தமாவார்; இனும்-இனிமேலும் நீதேது - தீமை, ஏது (ஒன்றுமில்லை), என்று-என்றுகூறி, அங்கு அங்கு-அந்த அந்த இடத்தில்; அணி-படைவரிசைகளை; கண்டு-சென்று பார்வையிட்டு; ஓயாது-ஒழிவின்றி; ஏற்று-தாங்கின-வன்படை-வலிமை பொருந்திய .வேற்படை; வலிசேர்ந்த-வலிமை கொண்ட; திண்புயமே-உறுதியான தோள்; ஏய்ந்த-திரண்ட; கண்டகர்-அசுரர், கால்-கால்களும்; தொடை-தொடைகளும்; மூஞ்சி-முகங்களும், சுந்தரமோடு-கழுத்துக்களோடு; எலும்பு-எலும்புகளும்; உறுந்தலைகளும்-பெரிய தலைகளும், துணிபட-அறுபட்டு வீழ்ந்திட; அடர்ந்த நெருங்கிய, சண்டைகள்-போர்கள்; தொடர்ந்து செய்து, பேய் எனும்-பேய்கள் என்று கூறப்படுகின்ற; குணிங்குகள்-பிசாசுகள் (பேய்கள்) நிணங்கள்-கொழுப்புகள்; உண்டு-தின்று; அரன் மகன்-சிவனுடைய மகன் (சிவகுமாரன்); புறம்-பக்கம்; செயம்-வெற்றி; எனும்சொலே- என்ற சொற்களே; களமிசை-போர்க்களம் எங்கும்; எழுமாறே-ஒலிக்கும்படி.

**கருத்துரை :**

விளங்குகின்ற வேதங்கள் வல்ல பிரமதேவனும், திருமாலும், இந்திரனும், என்றும் பெருமையுடன் விளங்கும் ஓர் இலட்சத்து ஒன்பது தம்பிமார்களும், வானுலகில் வாழும் தேவர்களும் கொன்றைமலர் அணிந்த அழியாத சிவபெருமானுடைய சேனைக் கூட்டமும் முருகனாகிய எனக்குச் சொந்தம், ஆதலால் இனிமேல் அடியார்களுக்கு எவ்வித தீமையும்இல்லை என்று இவ்வாறு கூறி முருகப் பெருமான் அப்

போர்க்களத்தில் அந்த அந்த இடங்களிலுள்ள படை வரிசைகளை சென்று பார்வையிட்டார். என்றும், தன்னை நீங்காது இருக்கும் வலிய வேற்படையைத் தனது வலிமையும் உறுதியும் மிக்க தோளில் தாங்கினார், அவருடன் போர் செய்ய வந்த அசுரர் படைகளின் கால்களும் தொடைகளும், முகங்களும், கழுத்துக்களும், எலும்புகளும், பெரிய தலைகளும் அறுபட்டு வீழ்ந்தன. பிசாசுகள் கொழுப்புக்கள் முதலான வற்றை உண்டு சிவகுமாரன் பக்கமே வெற்றி! வெற்றி! என்று முழக்கமிட்ட சொற்கள் போர்க்களம் எங்கும் பரவச் சண்டைகள் அதிகமாய் நடந்தன.

துலங்கு மஞ்சிறை யலங்கவே
  விளங்க வந்தவொர் சிகண்டியே
துணிந்தி ருந்துயர் கரங்கண்மா
  வரங்கண் மிஞ்சிய விரும்புகூர்

துன்றுந் தண்டமொ டம்பீர்வாள்
  கொண்டண் டங்களி னின்றூடே
சுண்டும் புங்கம ழிந்தேலா
  தஞ்சும் பண்டசு ரன்சூ தே

சூழ்ந்தெ ழும்பொழுதே கரம் வாங்கி யொண்
டிணிவே
றூண்டி நின்றவனே கிளையோங்க நின்றுளமா
துவந்த வட்டட வகிர்ந்து வென்றதி

பலம்பொ ருந்திய நிரஞ்சனா
சுகங்கொ ளுந்தவர்வணங்கு மிங்கித
முகந்த சுந்த வலங்க்ருதா

—அரிபிரமருமேயோ

**பதவுரை :**

துலங்கும்-ஒளிசெய்யும்; அம் - அழகிய; சிறை-தோகை; அலங்கவே - அசையும்படி, விளங்கவந்த; சிகண்டியே-மயில்வாகனத்தில்; துணிந்து-உறுதியுடன், இருந்து - வீற்றிருந்து; உயர்கரங்கள்-வலிமை மிக்க கைகள்; மா-பெரிய; வரங்கள்; மிஞ்சிய- மிக்க; கூர்மையுடைய; இரும்பு-ஆயுதங்களையும்; துன்றும்-வலிமைமிகுந்த; தண்டமொடு-தண்டாயுதத்துடன்; அம்பு-அம்புகள்; ஈர்வாள்-பிளக்கும் வாளாயுதம்; கொண்டு-முதலிய படைகளைக் கொண்டு; அண்டங்களினூடே-அண்டங்களில் இருந்து (சூரபன்மன்); சுண்டும்- செலுத்தின; புங்கம்-அம்புகள்-அழிந்து - அழிந்துபோயின ; ஏலாது-மேலும் போர் செய்ய முடியாமல் அஞ்சும்-அச்சம் கொண்ட, சூரன்-சூரபன்மன்; பண்டு-முன்பு; சூதே-வஞ்சனை செய்ய; சூழ்ந்து நினைத்து; எழும்பொழுதே-புறப்படும்பொழுது கரம்-கைகளில்; ஒண்திணிவேல்-ஒளிபொருந்திய உறுதியான வேற்படையை; வாங்கி-எடுத்து; தூண்டி-எறிந்து; நின்றவனே-எதிர்த்து நின்றவனே. கிளை-கிளைகள்; ஓங்க-எல்லாத் திசைகளிலும் பரவ; நின்றுள-நின்றிருந்த மாமரம் துவம்துவம்பட-இரண்டாகப் பிளக்கும்படி; வகிர்ந்து-பிளந்து, வென்று - வெற்றிகொண்டு, அதிபலம்-அதிகவலிமை, பொருந்திய; நிரஞ்சனா-களங்கம் இல்லாதவனே; சுகம்-இன்பம்; கொளும்-பெறுகின்ற, தவர்-தவசீலர்கள்; வணங்கும்-தொழுகின்ற; இங்கிதம் - எண்ணத்தை; உகந்த-விரும்பும்; சுந்தர-அழகனே; அலங்கிருதா-அலங்காரனே! அரி·பிரமருமேயோ (அரிபிரமரும், ஏ, ஓ) அரியும் பிரமதேவனும் கூட,

**கருத்துரை :**

அந்தப் போர்க்களத்தில் ஒளிசெய்யும் அழகுடைய தோகை அசையும்படி ஒரு மயில் வாகனமாக இந்திரன் வந்து நின்றான். முருகப் பெருமான் அவ்வாகனத்தில் உறுதியுடன் அமர்ந்து சூரனுடன் கடும்போர் செய்தார். சூரன் வலிமை மிக்க தோள்களும் வரங்களும் உடையவன். அவன் கூர்மை மிகுந்த ஆயுதங்களையும், வலிமை மிகுந்த தண்டாயுதத்தையும், அம்புகளையும், வெட்டும் வாளாயுதத்தையும் கொண்டு அண்டங்கள் யாவற்றுள்ளும் இருந்து கொண்டு போர் செய்தான். அவன் வீசிய அம்புகளும் ஏனைய ஆயுதங்களும் முருகப் பெருமானால் அழிக்கப்பட்டன. சூரன் மேலும் போரைத் தொடர முடியாமல் வஞ்சனை செய்ய நினைத்தான். ஆகாயம் அளாவப் பல கிளைகள் ஓங்கியிருக்கும் படி மாமரமாக நின்றான். குமரக் கடவுள் தன் படைக்கலநாயகமான வேற்படையைத் தன் வலிமை மிக்க கையில் எடுத்து வீசினார், அம்மாமரம் இரண்டாகப் பிளந்து வீழ்ந்தது. இவ்வாறு பிளந்து பெரும் வெற்றி கொண்ட அதிக பலம் பொருந்திய களங்கம் அற்றவனே! முத்தியின்பத்தைப் பெறும் தவசீலர்கள் நின்னைத் தொழும் எண்ணத்தை விரும்பும் அழகனே அலங்காரனே. திருமாலும், பிரமனும்கூட :

அலைந்து சந்தத மறிந்திடா
  தெழுந்த செந்தழ னுடம்பினா
    ரடிங்கி செந்தழ னுடம்பினா
      ரடிங்கி யங்கமு மிறைஞ்சியே
        புகழ்ந்த வன்று மெய் மொழிந்தவா

அங்கிங் தென்பத றுந்தேவா
  யெங்குந் துன்றி நிறைந்தோனே
    யண்டுந் தொண்டர்வ ருந்தாமே
      யின்பந் தந்தரு ளுந்தாளா

ஆம்பி தந்திடுமா மணிபூண்ட வந்தளையா
வாண்ட வன்குமரா வெனை யாண்ட
செஞ்சரணா
அலர்ந்த விந்துள வலங்க லுங்கடி
செறிந்த சந்தன சுகந்தமே
யணிந்து குன்றவர் நலப் பொருந்திட
வளர்ந்த பந்தனை யெனும் பெணாள்

— தனையணை மணவாளா

**பதவுரை :**

அலைந்து-மேலுலகத்திலும் கீழுலகத்தினும் தேடியலைந்து; சந்ததம்-எப்பொழுதும்; அறிந்திடாது-அறியமுடியாதபடி; எழுந்த-தோன்றி; செந்தழல்-சிவந்த நெருப்பு; உடம்பினார்-திருமேனியையுடையவர்; அங்கம்-திருமேனி; அடங்கி-மாணவனாக அடக்கத்தோடு; இறைஞ்சியே-வணங்கி; புகழ்ந்த அன்று-உன்னைப்

புகழ்ந்து கூறிய அந்தப் பொழுதில்; பெய்-பிரணவப் பொருளை; மொழிந்தவா-விளக்கியவனே! அங்கு இங்கு-அந்த இடம் இந்த இடம்; என்பது-என்று சொல்லப்படுவது; அறும்-இல்லாத; .தேவா-தேவனே; எங்கும்-எல்லாவிடத்தும்; துன்றி-நெருங்கி; நிறைந்தோனே-நிறைந்தவனே; அண்டும்-சார்ந்த, தொண்டர்-அடியார்கள்; வருந்தாமே-துன்புறாமல்; இன்டம்-இன்பத்தை தந்தருளும்; கொடுத்து-அருள் செய்கின்ற, தாளா-திருவடிகளை யுடை யவனே ஆம்பி-ஒலி கடல்; தந்திடும்-தருகின்ற; மாமணி-சிறந்த முத்துக்களை, பூண்ட-பரலாகக் கொண்ட, அம்-அழகிய; தளையா-சிலம்புகளையுடை யவனே-ஆண்டவன் சிவபெருமானுடைய குமரா-குமாரனே! எனை-என்னை, ஆண்ட அடிமை கொண்ட, செஞ்சரணா-சிவந்த திருவடிகளையுடை யவனே; அலர்ந்து-மலர்ந்த; இந்துளம்-கடம்பமலர்; அலங்கல்-மாலை; கடி-மணம்; செறிந்த-நிறைந்த; சந்தனம்-சந்தனம்; சுகந்தம்-வாசனைப் பொருள் அணிந்து-அணிந்து கொண்டு, குன்றவர்-வேட்டுவர், நலம் பொருந்திட - நன்மையடைய; வளர்ந்தபந்தனை-வளர்ந்த மகள்; எனும்-என்று சொல்லப்படும்; பெணாள்தனை-பெண்ணை; அணை-தழுவிய; மணவாளா-மணபகனே;

## கருத்துரை

திருமாலும் பிரமனும் முறையே கீழுலகத்தினும் மேலுலகத்தினும் சிவபெருமானுடைய அடியும் முடியும் காண்பதற்குப் பன்றியாகவும், அன்னமாகவும் வடிவெடுத்துப் பலயுகங்கள் தேடியும் காண முடியாதபடி செந்தழல்திருமேனி கண்டு ஓங்கி வளர்ந்து நின்றார். அத்தகையவர் திருமேனி கொண்டு ஒரு மாணவனாக நின்று அடங்கித் தொழுது புகழ்ந்த போது அவருக்குப் பிரணவத்தின் பொருளை உணர்த்தியவனே! அந்த இடத்தில் உள்ளான்; இந்த இடத்தில் உள்ளான் என்று சுட்டி அறியப்படாத தேவனே! எவ்விடத்தும் நிறைந்துள்ளவனே! நின்னைச் சரண் அடைந்த அடியார்களை துன்பம் அடையாமல் காத்து இன்பத்தை அருளும் திருவடிகளையுடை யவனே! ஒலிக்கின்ற கடலில் தோன்றும் சிறந்த முத்துக்களைப் பரலாகக் கொண்ட சிலம்பணிந்த அழகிய திருவடிகளையுடையவனே! ஆண்டவனாகிய சிவபெருமானுடைய திருக்குமாரனே! என்னை அடிமையாகக் கொண்ட சிவந்த திருவடிகளை உடையவனே! மலர்ந்த கடம்ப மலர் மாலையினையும், மணம் மிக்க சந்தனமாகிய நல்ல வாசனைப்பொருளையும் அணிந்து வேட்டுவர்குடி முழுவதும் நன்மையைப் பெறுவதற்கு அக்குடியில் வளர்ந்த மகள்எனும் பெண் கொடியான வள்ளியம்மையை மணந்த மணவாளனே!

குலுங்கி ரண்டுமு கையுங்களா
  ரிருண்ட கொந்தள வொழுங்கும் வேல்
    குரங்கு மம்பக மதுஞ்செவா
      யதுஞ்ச மைந்துள மடந்தைமார்

கொஞ்சும் புன்னொழி லுங்காலோ
  ருஞ்சண் டன் செய னுஞ்சூடே
    கொண்டங் கம்பட ருஞ்சீழ்நோ
      யண்டந் தந்தம்விழும் பாழ்நோய்

கூன்செ யும் பிணிகால் கரம்வீங்க ழுங்கலும்
வாய்
கூம்ப ணங்கு கணோய்துயர் சார்ந்தபுன்
கணுமே

குயின் கொ ளுங்கடல் வளைந்த விங்கெனை
  யடைந்தி டும்படி யினுஞ் செயேல்
குவிந்து நெஞ்சமு ளணைந்து நின்பழ
  நினைந்து யும்படி மனஞ் செயே

திருவருண்முருகோனே — 4.

## பதவுரை :

குலுங்கும்-அசைகின்ற, முகையும்-தனங்களும், கள்ஆர் - தேன் நிறைந்த; இருண்ட - கரிய; கொந்தளம்-கூந்தலின்; ஒழுங்கும்-முடிப்பும்; வேல்-வேற்படையை, குரங்கும்-போன்றிருக்கும் அம்பகம் - கண்களாகிய; அது - அவையும், செவாய்-சிவந்த வாயான்; அது-அதுவுப சமைந்துள-அமைந்துள்ள, மடந்தைமார்-மகளிரை; கொஞ்சும்-கொஞ்சுகின்ற, புன்தொழிலும்-இழிந்த செயலும்; கால்-ஆயுள் முடியும் காலத்தை; ஓரும்-அறியும், சண்டன்-இயமன்; செயலும்-உயிரைப் பிடிக்கும் செயலும், சூடே முழுவதும்; படரும்-பரவுகின்ற; சீழ்நோய்-கட்டி; அண்டம்-அண்டவாதம்; தந்தம்விழும்-பற்கள்விழுகின்ற, பாழ்நோய்-பாழானநோய்; கால்கரம்-கால்களும், கைகளும்; வீங்கு-வீங்குகின்ற, அழுங்கலும்-நோயும், வாய்கூம்பு- வாய் திறக்க முடியாதபடி மூடச்செய்யும்; அணங்கு-நோய், கணோய்-கண்நோய்; துயர்சார்ந்த-துயரம் பொருந்திய; புன்கணுமே-நோய்களும், குயின்கொளும்-மேகம் முகந்துகொள்ளும்; கடல் வளைந்த இங்கு-கடல்சூழ்ந்த இம்மண்ணுலகில்; எனை-என்னை அடைந்திடும்படி-மீண்டும் பிறக்கும்படி, இனும்செயேல்-இன்னும் செய்யாதிருப்பாயாக; குனிந்து-ஒன்றுபட்டு; நெஞ்சம் உள்-மனத்தினுள்ளே; அணைந்து-பொருந்தி; நின்பதம்-உன்னுடைய திருவடிகளை; நினைந்து நினைந்து, உயும்படி-கடைத்தேறும்படி. மனம் செயே-திருவுளம் பற்றுவாயாக; திருவருள்-திருவருளைப் பொழிவும்; முருகோனே-முருகப் மானே.

## பதவுரை

அசைந்தாடும் இருதனங்களும் கரியகூந்தலும் வேற்படை போன்ற கண்களும், சிவந்த வாயும் கொண்டுள்ள அழகிய பருவமங்கையரை கொஞ்சுகின்ற இழிசெயலும், ஆயுட்காலம் முடியும் பொழுது, எமன் உயிரைப் பிடிக்கும் கொடுஞ்செயலும், வெப்பம் மிகுந்து உடம்பு முழுவதும் படரும் கட்டி முதலான நோய்களும், அண்டவாத நோயும், பற்கள் விழுகின்ற பாழான நோயும், உடம்பைக் கூனச் செய்யும் நோயும், கால்கைகள் வீங்கும் படியான நோயும், கண்ணோயும், துயரம் பொருந்திய பிற நோய்களும், என்னை அணுகினும் அணுகாமல் காத்தருள வேண்டும். மேகம் நீரை முகந்து கொள்ளும் கடலால் சூழப்பெற்ற இம்மண்ணுலகில் மீண்டும் பிறக்கும்படி செய்யாதருள்வாயாக. திருவருள் முருகோனே, மனம் ஒன்றி அதனுள் பொருந்தி நின்திருவடிகளை நினைத்து உய்யும்படித் திருவுளம் பற்றியருள்க. (தொடரும்)





டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்


(53)

திருமால் பிருந்தையை விரும்பி அங்கு ஒரு அழகிய சோலையில் முனிவராய் அமர்ந்திருந்தார். கற்பு மிகுந்த பிருந்தை கயிலை சென்ற கணவன் வராமையால் வருந்தி அச் சோலைக்கு வந்தாள். அவள் அளவற்ற துன்பத்தால் வாடி வருந்தினாள். வைகுண்டத்தில் துவார பாலகர்களாகிய ஜய விஜயர்கள் இரு சிங்கங்களாகி அவளை அஞ்சுமாறு விரட்டினார்கள். அங்கு முனிவராயிருந்த திருமால அவளை அஞ்சேல் என்று அபயமளித்தார். சிங்கமாக வந்தவர்கள் விலகிச் சென்றார்கள்.

பிருந்தை அம்முனிவரைத் தொழுது ''எந்தையே! என் கணவனார் கயிலை சென்றார். இன்னும் வரக்காணேன். அவர் மாய்ந்தனரோ? அவர் நிலைமை யாதோ? நீர்அறிந்து கூறும்'' என்று அழுத கண்ணுடன் கேட்டாள்.

அது சமயம் விஷ்ணுவின் சேனைத் தலைவர்கள் இருவர் குரங்கு வடிவுடன் சலந்தரனுடைய பிளந்த உடலைக் கொணர்ந்து அங்கு இட்டார்கள். பிருந்தை அது கண்டு 'அந்தோ!' என்று அலறி அழுதாள். முனிவர் 'பெண் மணியே! நீ வருந்தாதே உன் கணவனை எழுப்பித் தருவேன்' என்று கூறி சலந்தரன் உடம்பைப் பொருந்த வைத்தார். அவ்வுடலில் தான் நுழைந்து மறைந்துவிட்டார். சலந்தரனாக நடித்தார். கணவன் என்று அச்கற்புடையவள் களித்தாள். திருமால் அவளுடன் பலகாலம் கூடி மகிழ்ந்தார். ஒரு நாள் தூங்கும் போது மாயம் அழிந்தது. பிருந்தை அவரை மாயன் என்று அறிந்து வெகுண்டாள்.

''ஏ மாயனே! என்னை மயக்கி என் கற்பைப் பங்கப்படுத்தினாய். உனக்குத் துணை புரிந்த ஜய விஜயர்கள் உனக்குப் பகைவர்களாக பிறக்கக்கடவது. உனக்குக் குரங்குகள் துணை செய்ததால், நீ மனிதனாகப் பிறந்து குரங்குகளைத் துணையாகக் கொள்வாயாக, உன் மனைவியை அரக்கர் கவர நீ பழியும் துயரும் எய்துவாயாக' என்று சாபந் தந்து ஏரியில் மூழ்கி இறந்தாள்.

திருமால் பிருந்தை எரிந்த சாம்பலில் எலும்பில் புரண்டு வருந்தினார். தேவர்கள் கயிலை சென்று மாயன் செயலைத் தூய சிவ மூர்த்தியிடம் கூறினார்கள். அம்பிகை கருணை கூர்ந்து ஒரு விதையைத் தந்து அங்கு விதைக்குமாறு விளம்பினாள். பிரமன்அதனை கொணர்ந்து பிருந்தை எரிந்த சாம்பலில்நட்டு அமுதத்தை வார்த்தார். அது துளசி செடியாக முளைத்தது. பின்னர் அது ஒரு பெண்ணுருவாயிற்று. திருமால் அவளைக் கண்டு பிருந்தை மீதுள்ள காதலைத் துறந்து அவளை மணந்து கொண்டார். அத் துளசியையும் தரித்துக் கொண்டார்.

பின்னர் திருவீழிமிழலையில் தினம் ஓராயிரம் தாமரைப் பூவால் சிவபிரானை வழிபட்டு ஒரு குறைந்த பங்கயத்துக்குப் பதில் செங்கண்ணை எடுத்துச் சிவன் திருவடியில் அர்ச்சித்து ஆழிப்படையைப் பெற்றார்.

இதுதான் சிவபெருமான் வேற்றுருக் கொண்ட விந்தை. இதனால் பெருமானுடைய பெருமை குன்றிலிட்ட தீபம் போல் தெளிவாக விளங்குகின்றதல்லவா? என்றார்.

தட்சன்;- ''சிவன் மாட்டின் மேல் ஏறுமோ'' என்றான்.

ததீசி, 'உலகமெல்லாம் ஒடுங்கியபோது தருமம் ஒடுங்காது எருதுவடிவுடன் ஈசனையடுத்தது. இறைவன் அத்தரும விடை மீது ஆரோகணித்தான். உலகங்களையெல்லாம் தாங்கும் ஈசனைத் தருமம் தாங்கியது. ஆதலால் அது தருமபாகும்.

திரிபுரம் எரித்தபோது, தேர் அச்சு முறிந்தது. திருமால் விடைவடிவாகி இறைவனைத் தாங்கினார். தட்சன் ''விடையவன் விடமும் உண்ணுபோ?'' என்றான்.

ததீசி, ''அமரர்கள் அசுரர்களின் போரினால் மாள்வதால், சாவா மூவா அமுதம் உண்ண வேண்டி பாற்கடல் கடைந்தார்கள். மந்தரகிரி மத்தாக, சந்திரன் தூணாக, வாசுகி தாம்பாகப் பிடித்து அசுரரும் அமரரும் நெடுங்காலம் பாற்கடலைக் கடைந்தார்கள். வாசுகி என்ற நாகம் துன்பம் பொறாது ஆலால விடத்தைக் கக்கினான். அவ்விடம் எல்லா உலகங்களையும் வெதுப்பியது. விண்ணவர்கள் வெருவி ஓடினார்கள். அருகில் சென்ற திருமாலின் உடம்பு கருகிக் கருபால் ஆயினார். எல்லோரும் கயிலாயஞ் சென்று கண்ணுதற் கடவுளைப் போற்றி, ''ஐயனே! நாங்கள் பாற்கடல் கடைந்தோம். அதில் முதலில் விளைந்தது தேவரீருடையதாகும். காத்தருள வேண்டும்'' என்று வேண்டி நின்றார்கள்.

சிவபெருமாங் தம்மருகே திருநீற்றுக் கோயிலைத் தாங்கி நிற்கும் சுந்தரரைப்



பார்த்து, ''சுந்தரனே! அந்தரரை வாட்டும் அவ்விடத்தை இவ்விடத்துக் கொணர்க'' என்று ஆணையிட்டார். அவர் பேரய் கொடிய கடிய நஞ்சை நாவல் பழம்போல திரட்டிக் கொணர்ந்தார். அகில உலகங்களும் உய்ய எம்பெருமான் அந்த நஞ்சை உண்டு நீலகண்ட ராக ஆனார். இது ஒன்றே அவருடைய கருணையையும் வலிமையையும் பறை சாற்றும்'' என்றார்.

தட்சன்: ''உமது சிவன் மயானத்தில் நடிக்குமோ'' என்றான்.

ததீசி, ''சிவ பெருமான் சர்வசங்காரம் செய்து மகா மயானத்தில் ஆனந்த நடம் புரி கின்றார். இது அவருடைய தனிப் பெருந் தலைமையை உணர்த்துகின்றது'' என்றார்.

தட்சன் ''சிவன் கங்கையைச் சுமக்குமோ'' என்றான்.

ததீசி, ''ஒரு சமயம் உமாதேவியார் பின் புறமாக வந்து விளையாட்டாக தேவதேவ ருடைய திருக்கண்களைப் பொத்தினாள்; அவர் திருக்கண்களே சோமசூரியாக்கினி யாதலால் உலகம் யாவும் இருண்டுவிட்டது. அப்போது அரனார் நெற்றிக் கண்ணைச் சிறிது விழித்து அவ்வொளியால் உலக இருளை மாற்றியருளி னார்.

அதனால் அஞ்சிய அம்பிகையின் திரு விரல்களில் வியர்வை யுண்டாயிற்று. அது வெள்ளமாகப் பெருகி உலகை அழிக்க வந்தது. இறைவர் அந்த வெள்ளத்தைத் தமது சடை யில் ஒரு உரோமத்தில் அடக்கியருளினார். பின்னர் அமரர்கள் வேண்ட அதில் ஒரு சிறிது தந்தருளினார். அது கங்கையாக மூவுலகிலும் பெருகி உய்வு தந்தது. பகீரதன் தவத்தாலும் பூவுலகில் வந்து சகரருடைய எலும்பில் பட்டு அவர்கட்குச் சுவர்க்கம் நல்கியது.

கங்கையைச் சங்கரன் தலையில் முடிந்தது பேராற்றலையும் பெருங்கருணையையும் உணர்த்துகின்றது'' என்றார்.

தட்சன், 'சிவனுக்கு மனைவியும் வேண்டுமோ?'' என்றான்.

ததீசி,''சிவபெருமானுடைய தனிப்பெருங் கருணையே உமையென்னும் பெண்ணுருக் கொண்டு விளங்குகின்றது. இல்லையேல் உலகம் யோகியாகி யழிந்து போகும். உமாதேவி என்பது சிவமூர்த்தியின் தண்ணருளாகும். சிவன் பிரமசாரி, உமை கன்னி, இவைகளைத் தத்துவ ஞானிகள் உணர்வார்கள். மூடனே! இது உனக்கு எவ்வாறு விளங்கும்' என்று கூறி னார்.

தட்சன், 'சிவனுக்கு மகவும் உண்டோ?' என்று கேட்டான்.

''இந்திரன் போரில் அசுரர்களையெல்லாம் மாய்த்துப் பொன்னுலகில் ஆட்சி புரிந்துகொண்டிருந்தான். அதனால் அசுரர்கோன் அல்லல் பட்டு சுக்கிரரைப் பணிந்து அசுரகுலம் அழிந்ததை உரைத்து நின்றான். வெள்ளி பகவான் ''அசுரர் ஏறே! வருந்தாதே. தேய்ந்தவர் வளர்வர். திங்களே சான்று, பிரமதேவரின் அருளால் வந்த வசிட்டர் முனிகுலத்துக்குத் தலைவர். பெருந்தவம் புரிந்துகொண்டிருக்கின்றார். ஒரு அசுர கன்னிகையை யனுப்பி அவள் மூலம் அசுரமூலந் தழைக்கச் செய்வாய்'' என்று ஆலோசனை கூறினார்.

அசுரவேந்தன் அது கேட்டு மகிழ்ந்து விபுதையென்ற அழகிய கன்னிகையைஅழைத்து ''அம்பா! உன்னால் இந்த அழிந்த அசுரகுலம் தழைக்க வேண்டும். நீ சென்று யாதவத்தில் சிறந்த மாகத முனிவரிடம் மகப்பேறு பெற்று உதவி செய்'' என்றார்.

விபுதை, பொன்மேரு கிரியில்பேறு அரிய பெரிய தவம் புரியும் மாகதரைக் கண்டாள். அவருடைய தவத்தின் பெருநிலையைக் கண்டு திகைத்தாள்.

''அம்மா! இவரை ஆயிரம் மேனகை வந்தாலும் மயக்கவொண்ணாது, வடவைத்தீயைப் கணவனாகப் பெறுவேன் என்று கருதினாள். ஒரு புறத்தில் உள்ளத்தை ஒடுக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தாள்.

ஒரு சமயம் மாகத முனிவருக்கு முன்னே இருயானைகள் மருவின. இந்தக் காட்சியைக் கண்ட மாகதருக்கு ஆசை வெள்ளம் பிறந்தது. உள்ளம் நிலை குலைந்தது. இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் தவத்தில் இருந்த விபுதை அவர் முன் வந்து மின்னல் கொடி போல் நின்றாள். அவளைப் பெண் யானையாகுமாறு செய்து அருந்தவர் ஆண் யானையாகிச் சேர்ந்தார். அவர்களிடம் கயமுகாசுரன் பிறந்தான். பிறந்த அவன் வாளும் பலகையும் ஏந்திச் சுற்றினான். அதனால் உலகம் சுழன்றது. அவளுடைய உரோமங்களில் பல அரக்கர்கள் பிறந்தார்கள். இதனைக் கண்டுமுனிவர் ''நாம் பிழை செய்து விட்டோம்'' என்று தன்னையே நொந்து கொண்டார். அசுரவேந்தன் அகமகிழ்ந்தான்.

கயமுகாசுரனும் அவனுடைய சேனைகளும் சேர்ந்து உலகத்தை நடுங்க வைத்தார்கள்.

''மலையினைப் பொடிப்பர் ஏனை
  மண்ணினை மறிப்பர்; வாரி
அலையினைக் குடிப்பர் கையால் ஆருயிர்த்
  தொகையை அள்ளி
உலையினைப் பொருவு பேழ்வாய் ஒச்சுவர்
  பரிதியோரும்
நிலையினைத் தடுப்பர் சேடன் நெளிதரப்
  பெயர்வர் மாதோ''

அசுரவேந்தனுடைய வேண்டுகோளுக்கு இசைந்து கயமுகனிடம் சுக்கிரபகவான் வந்து, பின்வருமாறு கூறினார்.

''கயமுகனே! நீ தவஞ் செய்து பேராற்றலைப் பெற வேண்டும். காலத்தை வீணாக்கித் திரியாதே. கூற்றுவன் வரும்போது வலிமை, செல்வம், கல்வி முதலிய யாவும் துணைசெய்ய மாட்டா. ஆதலால் அரனாரை வேண்டி அருந்தவம் புரிந்து பெருந்திறல் பெறுவாயாக'' என்று உபதேசித்தார்.

கயமுகாசுரன் சுக்கிரரிடம் மந்திர உபதேசம் பெற்று, தவத்திற்குரிய வழி வகைகளை யறிந்து மேருகிரி சென்றான். ஐந்தெழுத்தை ஓதி ஐம்புலன்களையடக்கி, ஐந்தழலுக்குநடுவே ஐம்முகக் கடவுளைத் தியானித்து ஐந்து கண்டங்களும் வியக்குமாறு தவஞ் செய்தான்.

''ஆயிரம் ஆண்டுபுல் லடகு மேவினான்
ஆயிரம் ஆண்டுசில் புனல்அ ருந்தினான்
ஆயிரம் ஆண்டள வனிலம் நுங்கினான்
மாயிரும் புவியுயிர் மடுக்கும் வாயினான்''!

மூவாயிரம் ஆண்டுகட்குப் பின் மூலத்தழலால் வெதும்பி வெளிப்பட்ட சகச்சிரார அமுதையுண்டு உறுதியுடன் தவஞ் செய்தான். அவன் உடம்பு வச்சிரம் போல் உறுதியாயிற்று. இதைக் கண்டு பிரமாதி தேவர்கள் பெரிதும் கலங்கினார்கள்.

கயமுகனுடைய தவத்துக்கு உளம்மகிழ்ந்த உமா நாயகன் விடைமீது வந்து காட்சியளித்தார். கயமுகாசுரன் கால காலனார் திருவடியில் வீழ்ந்து உருகிய சிந்தையுடன் நின்றான். ''அன்ப! உனக்கு என்ன வரம் வேண்டும்; கேள்'' என்றார் இறைவர்.

கயமுகன், 'கருணைக் கடலே! திருமால், பிரமன் இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் என்னிடம் தோல்வியை அடையவேண்டும். எந்த ஆயுதத்தாலும் எனக்கு முடிவு வராதிருக்க வேண்டும். மனிதர், அவுணர், விலங்கு என்ற எதனாலும் எனக்கு மரணம் வரக்கூடாது. என்னைப் போன்ற ஒருவன் வந்து என்னுடன் போர் புரியினும் அவனுடைய ஆயுதம் எனக்குத் தீங்கு செய்யாதிருக்க வேண்டும். ஒரு வேளை நான் அழியினும் பிறவாப் பெற்றியருளவேண்டும். எல்லாவுலகங்களிலும் என் ஆணை செல்ல வேண்டும்'' என்று வரம் கேட்டான். இல்லையென்னாத எம்பிரான் அவன் விரும்பிய வரங்கள் அனைத்தையும் தந்து நீங்கினார்.

சுக்கிர பகவானும் அசுரர் கோமானும் அவனிடம் வந்து ஆசி கூறினார்கள். கயமுகன் தேவதச்சனைக் கொண்டு மதங்கபுரம் என்ற ஓர் அழகிய நகரை உண்டாக்கி அதில் இருந்து அசுரரும் அமரரும் வணங்க ஆட்சி புரிந்தான்.

அசுரவேந்தன் புதல்வி விசித்திர காந்தியைத் திருமணம் செய்து கொண்டு இன்புற்றான்.

கயமுகாசுரனிடம் காமதேனு, கற்பகம், சங்கநிதி பதுமநிதி, சிந்தாமணியும் வந்து ஏவல் செய்தன. சுக்கிரர் அவனுக்கு அமைச்சராக இருந்தார். பிரமனும் தேவரும் தேவ மாதர்களும் அவனிடம் வந்து அவன் இட்ட பணியைச் செய்தார்கள்.

இந்திராதி இமையவரை அழைத்து ''தேவர்களே! இன்று முதல் என் முன் நீங்கள் சிரசில் மூன்று முறை குட்டிக்கொண்டு, இரு செவிகளைக் கரங்களால் மாறிப் பற்றி, இருந்து எழுந்து தோப்புக்கரணம் போட வேண்டும்'' என்றான். அதுபடியே அமரர்கள் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு, உடலும் உள்ளமும் வருந்தினார்கள். இவ்வாறு காலம் பல கடந்தன. ஞாலம் முழுவதும் கயமுகனுடைய கொடுமையிருந்தது. ஓலமிட்டு உம்பர்கள் உலைந்தார்கள்.

மாலயனாதி வானவர்கள் கால காலனாம் கறைமிடற்றுக் கடவுளிடம் போய், தொழுது அழுது கயமுகாசுரனால் தாம் படும் அல்லலைக் கூறி கருணை புரிய வேண்டும் என்று முறையிட்டார்கள். சிவபெருமான் ''வருந்தாதீர்கள். நாம் ஒரு புதல்வனைத் தந்து உங்கள் துயரினைக் களைவோம்'' என்று கூறி அருள்புரிந்தார். விடையவனிடம் விடைபெற்று விபுதர்கள் தத்தம் இருக்கை சேர்ந்தார்கள்.

கயிலாய மலையில் உள்ள ஓர் அழகிய நறுமலர்ச்சோலைக்கு பரமனும் பராசக்தியும் எழுந்தருளினார்கள். அதன் நடுவேயுள்ள மந்திரச் சித்திர மண்டபத்துக்குள் சென்றார்கள். அங்கே மந்திர ஓவியங்கட்குஇடையே சமஷ்டி பிரணவம், வியஷ்டி பிரணவம் என்ற இரு பிரணவ மந்திரங்கள் இருந்தன. அந்த இரு பிரணவ மந்திரங்களையும் அம்மையும் அப்பனும் திருக்கண் சாத்தினார்கள். அவை யானை வடிவுடன் கூடின. அப்பிரணவத்திலிருந்து பிரணவ வடிவுடன் விநாயகப் பெருமான் அவதரித்தார்.

''ஒருமையால் உணருவோர் உணர்வினுக்
குணர்வதாம்
பெருமையான் எங்கணும் பிரிவரும்
பெற்றியான்
அருமையான் ஏவரும் அடிதொழும்தன்மையான்
இருமையாம் ஈசனே என்ன நின் றருளுவான்.''

ஒரு முடியும், இரு செவியும், மூன்று கண்களும், நான்கு தோள்களும், ஐந்து திருக்கரங்களும், பவளமேனியும் ஆனைமுகமும் உடைய அவர்மீது மலர் மழை சிந்தியது.

# சிவநாமம் ஜெபித்தால் ஊழ்வினை வெல்லலாம்

**சிவாயநம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத பேர்க்கு
விதியே மதியாய் விடும்.**

**—ஔவையார்.**

விநாயகர் தாய் தந்தையரது தாள்மலரில் தாழ்ந்து வணங்கினார். பரம சிவரும் பராபரியும் மைந்தனைத் தழுவி மகிழ்ந்து 'ஒருவர் ஒரு கருமம் தொடங்கும்போது உன்னை வணங்குவரேல் அவருடைய கருமத்தை முடித்து வைப்பாயாக. உன்னை வணங்கிலாதார்க்கு விக்கினம் விளைவதாக'' என்று கூறி அருள் புரிந்தார்கள். விநாயகர் கயிலையில் வீற்றிருந்தருளினார்.

''என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
வின்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி; அலதுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதிநீ'

விநாயகப் பெருமானுடைய திருவவதாரத்தால் மகிழ்வெய்திய இந்திராதி தேவர்கள் கயமுகாசுரனால் மிகவும் நொந்து திருக்கயிலாய மலையையடைந்து விநாயகப் பெருமானுடைய திருவடிகளில் வணங்கி 'எம்பெருமானே! சிவபெருமானிடம் எல்லையில்லாத வரம் பெற்ற கயாமுகாசுரன் பெருந்துன்பம் செய்கின்றான். புதுமையாக ஒரு செயலைச் சொல்லியிருக்கின்றான். நாங்கள் அவனிடம் போய் தலையில் குட்டிக்கொண்டு காதுகளைக் கைகளால்பற்றிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு, அவனைக் கும்பிடவேண்டும். அண்ணலே! அவனை வதைத்து எம் அல்லலைச் சிதைத்து ஆண்டருள் புரிவீர்' என்று குறை கூறி முறையிட்டு, மோதகங்கள் வைத்துப் போற்றினார்கள்.

விநாயகப் பெருமான் எழுந்து அசலன் என்ற பூதத்தின் மீது ஏறிக்கொண்டு பூத கணங்கள் புடைசூழப் போருக்குப் புறப்பட்டார். தேவர்கள் குடை பிடித்தார்கள். சாமரை வீசினார்கள், வாத்தியங்கள் முழங்கின. மதங்கபுரம் சென்றார்.

கயமுகாசுரன் இதனையறிந்து ஆயிரம் வெள்ளம் அரக்கர் சேனைகளுடன் போருக்கு வந்தான். கடும் போர் நடந்தது. ஆயுதங்களால் அரக்கர் சேனை அழிந்தது.

கயமுகாசுரன் இதனைக் கண்டு காலாக்கினி போல் கனன்று வில்லை வளைத்துக் கணை மழை பொழிந்தான். பூத சேனைகள் சிதறியோடின. விநாயகப் பெருமான் அவன் முன் சென்றார். ''இவன் யாரென்று கேட்டான்'' கயாமுகாசுரன். அருகில் இருந்தோர் 'அசுரர் தலைவ! இவன் சிவன் மகன்' என்றார்கள். கயமுகாசுரன் கணபதியைப் பார்த்து 'சிவ குமாரா! உன தந்தை எனக்கு எண்ணற்ற வரங்களை வழங்கியுள்ளார். என்னைக் கொல்ல உன்னால் ஆகாது. நீ திரும்பிப்போ'' என றான்.

விநாயகர் அசுரனை நோககி ''தீயனே! நீ தேவர்களுக்குத் துன்பஞ் செய்தலால் உன்னை மாய்க்குமாறு சிவபெருமான் என்னை அனுப்பியுள்ளார். நீ இந்திரனை அவன் நகரில் ஆட்சி செய்யுமாறு செய்து இன்று முதல் இமய வருக்கு இடர் புரியாதிருந்தால் உனக்கு நாம் கருணை புரிவோம். இல்லையேல் இப்போது நீ அழிவது திண்ணம்'' என்று அருளிச் செய்தார்.

கயமுகாசுரன் வில்லெடுத்துப் பாணங்களை யேவினான். விநாயகர் அவன் விட்ட கணைகளைத் துண்டித்து அவன் வில்லை முறித்தார். கயாமுகாசுரன் தண்டாயுதத்தை யேந்தி எதிர்த்தான். ஐங்கரக் கடவுள் தண்டை முறித்து அவனை ஓங்கி அடித்தார். அவன் சோர்ந்து நிலறான். விநாயகர் தமது திருக் கரத்தில் உள்ள பாசத்தை ஏவிசேனைகள் முழுவதையும் பாய்த்தார். இதனைக் கண்ட கயமுகன் அநேக தெய்வப் படைக்கலங்களை யேவினான். அவைகள் வந்து விநாயகரைவலஞ் செய்து வணங்கி நின்றன.

விநாயகமூர்த்தி இவன் எந்த ஆயுதத்தாலும் சாகாவரத்தை எந்தையாரிடம் பெற்றுள்ளான் என்று திருவுளத்தில் சிந்தித்து தமது திருமுகத்தில் உள்ள தந்தத்தை முறித்து சிவ மந்திரத்தைக் கூறியேவினார். அக்கோடாயுதம் அவனுடைய மார்பைப் பிளந்து நன்னீர்க் கடலில் மூழ்கி கணேசருடைய கரத்தில் வந்து அமர்ந்தது.

அவனுடைய உடம்பினின்று வந்த உதிர வெள்ளம் ஒரு கானக முழுவதும் பரவியது. அந்த இடம் திருச்செங்காடு எனப் பேர் பெற்றது. அவன் இறவா வரம் பெற்றவன் ஆதலால் பெருச்சாளி வடிவுடன் எதிர்த்துவந்தான்.

## சிவத்தொண்டால் தீவினை நீங்கும்

அவ்வினைக்கு இவ்வினை
ஆமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது
உம்தமக்கு ஊனமன்றே!
கைவினை செய்தெம்பிரான் கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமை தீண்டப்
பெறாதிரு நீலகண்டம்.

—திருஞானசம்பந்தர்

விநாயகர் அசலனுடைய தோளில் இருந்து இறங்கி அந்த ஆகுவின் மீது ஆரோகணித்து அருள் புரிந்தார். அவன் மெய்ஞ்ஞானம் பெற்று உய்ந்தான். புத்தேளிர் கணேச மூர்த்தியைப் போற்றிப் புகழ்ந்து பூமாரி பொழிந்தார்கள்.

மயிலுக்குத் தோகையழகு; சேவலுக்குக் கொண்டை அழகு; யானைக்குக் கொம்பு அழகு, தமது திருமுகத்தில் அழகாக விளங்கிய ஒரு கொம்பை அமரர்கள் பொருட்டு ஒடித்து. அசுரனை மடித்து, அருளிய விநாயகருடைய கருணைத் திறத்தைத் தேவர்கள் சிந்தித்து வந்தித்தார்கள்.

சுக்கிராசாரியரும், அசுரேந்திரனும்பறவையுருக் கொண்டு பறந்து கரந்து வாழ்ந்தார்கள்.

திருச்செங்கோட்டில் விநாயகர் சிவலிங்கம் வைத்து வழிபட்டார். அது 'கணபதீச்சுரம்' எனப் பேர் பெற்றது.

-தொடரும்.

# வாழ்வில் அமைதியும் வெற்றியும் பெற வாரீர்!

யோகிராஜ் தவத்திரு
**வேதாத்ரி மகரிஷி**

ஆன்மிகத் துறையிலே புதிய விளக்கம் பெற வேண்டும் என்ற ஆர்வத்திலே நாம் ஓரிடத்திலே கூடுகிறோம் என்றால் அந்த நேரத்திலே நமது மனத்துக்கு ஓர் அமைதி ஏற்படுவதை உணர்கிறோம். இதுஏன் என்றால் மனத்துக்கும் அதன் அடிப்படையான உயிருக்கும் எது வேண்டுமோ அது கிடைக்கப் போகிறது என்ற உள்ளுணர்வு அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்துகிறது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலக வாழ்க்கையிலே ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு பொருள் அவ்வப்போது தேவைப்பட்டுக் கொண்டே இருக்கிறது. உடலும் உயிரும் சேர்ந்த இயக்கத்திலே பொருள் தேவை. முக்கியமாகப் பசி, வெப்பதட்ப ஏற்றத் தாழ்வுகள், உடல் கழிவுப் பொருள்களின் உந்து வேகம் இந்த மூன்றும் இயற்கைத் தேவைகளாக உள்ளதால் உணவு, உடை இருப்பிட வசதி, இல்லறஉறவு இவை அவசியமாகின்றன. பொருள் தேவை என்பதைப் புறக்கணிக்கவே முடியாது; உடல் இருக்கும் வரையிலே, அந்த உடலிலே உயிர் இருக்கும் வரையிலே பொருள் தேவை. அவ்வாறு தேவையாகும் அந்தப் பொருளைத் தனி ஒருவரே உற்பத்திச் செய்து கொள்வது என்பது இயலாத காரியம், பலருடைய கூட்டு முயற்சியாலேதான் பொருளும் உற்பத்தியாக வேண்டும். ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திலே ஒரு உறுப்பினராகத்தான் இருக்க வேண்டி இருக்கிறது. ஆகவே மக்கள் தொடர்பு தேவை; பொருளும் தேவை. இதன் நேர் விளைவாக மற்றவர்களோடு இணைந்து வாழ்வது என்பது மனிதனுக்குத் தவிர்க்க முடியாததாகிறது. அதோடு ஆறாவது அறிவுடன் மனிதன் பிறந்ததன் நோக்கமே அறிவைப் பெருக்கிக் கொண்டு, இயற்கையை அறிந்து அத்துடன் ஒன்றிக் கலந்து முழுமை எய்த வேண்டும். அப்போதுதான் இயற்கை இனிமை கெடாது ஒவ்வொரு செயலிலும் அளவு, முறை கொண்டு இன்பமாக அவனால் வாழ முடியும். இத்தனையும் சரியாக, ஒழுங்காக நடைபெறுவதற்கு நம் நாட்டுச் சித்தர் பெருமக்கள் மூன்று அம்சங்கள் கொண்ட வாழ்க்கை நெறியை வகுத்திருக்கின்றார்கள். அவை (1) மகிழ்போகம்; (2) ஈதல்; (3) இறவாமை என்பன.

மகிழ்போகம் என்றால் என்ன? பஞ்சேந்திரியங்கள் எனப்படுகின்ற ஐந்து புலன்கள் வாயிலாகத் தானே நாம் நாள்தோறும் நமக்கு வேண்டிய பொருள்களைஎல்லாம்நுகர்கிறோம். அந்த அனுபோகத்தில் இன்பம் இருக்கிறது. ஆனால் அந்த இன்பம் கெடாதிருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம் அல்லவா? எந்த இடத்திலே அளவு மீறுகிறதோ, முறை மாறுகிறதோ அங்கு இன்பமானது துன்பமாக மாறும். இன்பத்தை இன்பமாகவே வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த இன்பத்திலே மாத்திரம் இருக்க வேண்டும். ஏன் அப்படி எனில் துன்பத்துக்குப் போனால் நமது அறிவு திசைமாறி விடும். செயல் அற்றுவிடும். எந்த நோக்கத்திற்குப் பிறந்தோமோ அந்த நோக்கத்திற்குச் செல்லாது. ஆகையினாலே இன்பம் இன்பமாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பதற்கு விழிப்புணர்வு, செயல் முறையிலே ஒரு விழிப்புணர்வு முக்கியமாகிறது.

அடுத்தது 'ஈகை' இந்த உலகிலே பிறந்து வந்துள்ள ஒவ்வொருவருக்கும் அளவற்ற ஆற்றல் அமைந்துள்ளது. அதை நல்ல முறையில் பெருக்கிக் கொண்டோமானால் ஒவ்வொருவரும் தான் வாழ்வதோடு பலருக்கும்நல்வாழ்வு அளிக்கக்கூடிய அளவுக்கு ஆற்றல் இருக்கிறது. அதனாலே இயல்பாக உள்ள அந்த ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப் பெருக்கிக் கொள்ளும்போது தன் தேவைக்கு மிஞ்சியதெல்லாம் தேவையானவர்களுக்கு அளித்துக் கடமை செய்ய வேண்டியிருக்கிறது. ஈகை அல்லது ஈதல் என்று என இதைத்தான் சொல்லுகிறோம்.

அதற்கு மேலாக ''இறவாமை'' என்பது. வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; சரி, எந்த



நோக்கத்தோடு பிறந்தோம்? ஆறாவது அறிவு முழுமை பெறுவதற்காக. அறிவை உயர்த்தி உயர்த்தி, இயற்கையின் இரகசியத்தை அறி



வதற்கு முதலில் இந்த உடலினுடைய இரகசியத்தை அறிய வேண்டும்; வாழ்வின் நோக்கத்தை அறிய வேண்டும்; பிறகு அதை அடைய வேண்டும்.

இதற்காகத்தான் ஆறாவது அறிவோடு பிறந்திருக்கின்றோம். அதற்கு முன்னதாக, அவ்வாறு பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முன்னதாக இந்த உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடுமாயின் இந்த உயிரில் இருக்கக்கூடிய பதிவுகள் அத்தனையும் சமப்படாது அப்படியே இருந்து விடும். அந்தப் பதிவுகளை நீக்கிக் கொள்வதற்காக உயிரானது மீண்டும் மீண்டும் உடல் அமைப்பு ஒன்றைத் தேட வேண்டியதாகும். இந்த நிலையைத் தான் வள்ளுவர் பெருமான் 'மாணாப் பிறப்பு' என்று குறிப்பிட்டுச் சொல்கின்றார். ஏற்பட்டுள்ள பதிவுகளை இந்தப் பிறவியிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டுமானால் உடலுக்கும் உயிருக்கும் உள்ள நட்பை உணர்ந்து, அந்த நட்பை நல்ல முறையிலே பாதுகாத்து, பிறவியெடுத்து வந்த பணி நிறைவேறும் வரை வாழ்வு தொடர வேண்டும். நமது நோக்கம் ஈடேறுவதற்காக எதுவரை நாம் வாழ்ந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறோமோ, அது வரையிலே நம் விருப்பப்படி இந்த உயிரும், உடலும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்; இது தான் இறவாமை என்பது.

இந்தப் பின்னணியிலே தான் சித்தர் பெருமக்கள் பகிழ்போகம், ஈதல், இறவாமை என்பதாக மூன்று வழிகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த உலகிலே அறிவின் ஆரம்பப் படியிலிருந்து முழுமைப்பேறு வரையிலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு படியில் இருக்கிறார்கள். அதில் கீழ்நோக்கத்தில் இருக்கக் கூடியவர்கள் அதிகமாகவும், மேல் நோக்கத்தில் இருக்கக் கூடியவர்கள் மிகச் சொற்பமாகவும் இருக்கிறார்கள். நாம் எல்லோருடனும் பழக வேண்டியிருக்கிறது. எனவே, ஒவ்வொருவரோடும் அவரவர்கள் குணங்களை அறிந்து, அவரவர்கள் தேவை உணர்ந்து, அவர்கள் தரம் அறிந்து பயன் செய்யும்போது எந்த அளவுக்கு மனத்தை விரிவுபடுத்தி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று எண்ணிப் பாருங்கள்.


## விளக்கம் என்னும் வெளிச்சம்

அதேபோல பொருள்களை அனுபவிப்பதிலே உடலுக்கு எந்த முறையிலேயும் சமுதாயத்துக்கு எந்த முறையிலேயும் இயற்கைக்கு எந்த முறையிலேயும் முரண்படாது அந்தப் பொருள்களை ஈட்டிக் காத்து துய்க்கவேண்டு

மானால் இதற்கெல்லாம் ஒரு தூய அ
நுண்ணிய அறிவு வேண்டும். வம்சா வழிய
இதுவரை நமக்கு வந்துள்ள பதிவுகளின் கார
மாகவும் இதுவரையில் உலகத்தில் நாம்வாழ்
போது ஏற்பட்ட பதிவுகளின் காரணமாக
நமது மனம், உடல்நிலை இரண்டுமே
றுண்டுதான் இருக்கும். உடலிலே ஏதேனு
நோய் இருக்கும்; அது வெளிக்காட்டாதி
தால் கூட அடக்கமாக இருக்கும். உள்ளத்தி
அமைதியின்மை அவ்வப்போது தோன்
கொண்டிருக்கும். இந்த இரண்டிலிருந்து
பட்டு நோயின்றி நிம்மதியாக, அமைதியா
வெற்றியாக உடல்நலத்தோடு நாம் வா
வேண்டும். அதே நேரத்தில் "நான் ய
யாருக்கு என்னென்ன செய்ய வேண்
என்று நினைக்கிறேனோ அந்தக் கடமை
லாம் செய்வேன்; அறிவிலே முழுமை பெ
வேன்" என்ற அளவிற்குத் தனக்கு நம்பிக்
ஏற்படக்கூடிய வகையிலே, ஒரு உறுதிப்பா
வேண்டுமானால் அதற்குப் பயிற்சி இல்லா
முடியாது.

நம்முடைய மனம் இன்பத்தையும் அ
பவிக்கும்; துன்பத்தையும் அனுபவிக்கு
பேரின்பமும் அனுபவிக்கும். நாம் ஆதிநி
யையும் மனத்தாலே பெற முடியும். அ
பவிக்க முடியும். நமக்கு என்ன வேண்டு
துன்பம் தவிர்த்து இன்பம் வேண்டும்; அமை
யும் வேண்டும்; பேரின்பமும் வேண்டும். அதற்
எந்த முறையில் பழகிக் கொள்ள வேண்டு
என்னும்போது தான் மனத்தை ஒழுங்குபடுத்
வதற்காகத் தியான முறை, உடலை ஒழுங்
படுத்துவதற்காகச் செயல்முறை ஆகியவை
தேவைப்படுகின்றன. தியானமுறை மனத்
ஒழுங்குபடுத்துவது. செயல்முறையானது உட
நலத்தைப் பெறச் செய்வது. இந்த இரண்
வேண்டும்.

தியானமுறையும் செயல்முறையும் கால
திற்கு ஏற்றவாறு எல்லோரும் எளிதாகப் பி
பற்றவும், பின்பற்றிப் பயன் காணவும் வேண்
மென்ற முறையிலே வகுத்ததுதான் மனவள
கலை என்ற ஒருதிட்டம். இந்த யோக மு
யிலே எளியமுறை குண்டலினி யோகம் என்
ஒன்று முக்கியமானது. அதன் பிறகு உட
பயிற்சி. அதற்கு மேலாக அகத்தாய்வு. அ



தாய்விலே எண்ணம் ஆராய்தல், ஆசை சீ
மைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழி
தல், நான்யார் என்று வினா எழுப்பி வி

வேண்டுமானாலும் போகட்டும் என்று விட்டு விடத்தான் முடியுமா? இங்குதான் தியாகம் வேண்டும். இரண்டு பேரிலே ஒருவர் மற்றவருக்கு விட்டுக் கொடுக்க முன்வர வேண்டும். அங்குப் இந்தப் பண்பு வேண்டும். இப்படி சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம் என்ற மூன்றைச் சரியாகத் தெரிந்து கொண்டோமானால் குடும்பத்தில் உள்ள பிணக்குகள் பெரும்பாலும் தீர்ந்து விடும்.



## இறைவன் தரும் வரம் யாது?

அடுத்ததாக எதிர்பார்ப்பு என்பதை ஓசையில்லாமல் உள்ளத்திலே தேக்கி வைத்துக் கொண்டு நாம் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவர் இப்படித்தான் நடக்க வேண்டும். இன்னதே செய்ய வேண்டும் என நாம ஒவ்வொருவரும் இன்னொருவருக்குத் திட்டமிட்டுக் கொண்டு எதிர்பார்க்கிறோம். இந்த மிதமிஞ்சிய எதிர்பார்ப்புத்தான் பிணக்கு பூசல்கள் பலவற்றிற்குக் காரணமாக இருக்கிறது. குடும்பத்திலே உள்ள பெண்கள், ஆண்கள் அனைவரும் இதைச் சரியாக உணர வேண்டும். ஒவ்வொருவரும் தான் என்ன கடமை செய்ய வேண்டும் என்பதை அடியோடு மறந்து அடுத்தவர்களுக்காகத் திட்டமிட்டுத் திட்டமிட்டு எதிர்பார்த்து ஏமாந்து, இதிலிருந்து வரக்கூடிய குழப்பம்தான் இன்று உலகம் முழுவதும் இருக்கக்கூடிய பிரச்சினை. அதைப் போக்க வேண்டுமானால் நான் என்ன நிலையில இருக்கிறேன்-வயதாலே, இடத்தாலே, தகுதியாலே, செல்வத்தாலே, கல்வியாலே எந்த நிலையில் இருக்கிறேன்? எனக்கும் அவருக்கும் உள்ள உறவிலே நான் எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இப்பொழுது இருக்கக் கூடிய நிலையை வைத்துக் கொண்டு நான் என்ன உதவி செய்ய முடியும் என்று பார்த்து அயரா விழிப்பு நிலையோடு இருந்தால் எந்த அளவுக்குக் குடும்பத்திலே மகிழ்ச்சி பரிணமிக்கும்! நானாக இந்த இராஜ மார்க்கத்தை விடுத்து எந்த நிலையிலும் பிறர் இதைத்தான் செய்ய வேண்டும், இப்படித்தான் செய்ய வேண்டும், இந்த அளவிலே செய்ய வேண்டும். இந்தக் காலத்திலே செய்ய வேண்டும் என்கிறபோதுதான் அங்கு பிணக்கு ஏற்படுகிறது. இந்த நான்கு வகை முறையை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்; ஒவ்வொரு குடும்பத்திலேயும் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். சீரிய வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கான இந்தக் குறிப்புக்களையெல்லாம் உணர்ந்து கொண்டால் மாத்திரம் போதாது. எந்த அளவு நாம் அதைச் செயல்படுத்துகிறோமோ அந்தச் செயலின் விளைவுதான் இறைவனின் பரிசாகும். நாம் என்ன செய்கிறோம். இந்தச் செயலுக்கு? எல்லாம் வல்ல மகாசக்தியால் உலகம் இயங்கி வரக்கூடிய நிலை ஒவ்வொரு செயலிலும் வருகிறதல்லவா? அந்த விளைவுதான் அவனுடைய ஆட்சி, திருவிளையாடல். நல்ல நோக்கத்தோடு, நல்ல தன்மையோடு, காலம், இடம், தொடர்பு கொள்ளும் பொருள் அறிந்து செயலை அளவோடு, முறையோடு செய்தால் அப்போது உங்களுக்குக் கிடைப்பதெல்லாம் இன்பமும், வெற்றியுமே. அதுதான் இறைவன் தரக்கூடிய வரம். நோக்கம் தெளிவின்றியோ, தீயதாகவோ இருந்து காலம், இடம் தொடர்பு கொள்ளும் பொருளும் சரியான அமைப்பிலே இல்லையானால் துன்பம்தான் வரும். இந்தத் துன்பம் ஏன் வந்தது என்றால் அதுவும் இறைவனுடைய வெளிப்பாடுதான்.

இறைவனானவன் துன்பம் தரலாமா என்று நாம் எண்ணுவோம். ஆனால் உண்மையிலேயே அது துன்பமன்று. நாம் உணர்வதற்காக, உணர்ந்து திருந்துவதற்காக வந்த ஒரு வாகனம்தான் அந்தத் துன்பம் என்பது. ஒரு தடவை ஏற்படக் கூடியதை வைத்துக் கொண்டு மீண்டும் அந்தத் துன்பம் வராது காத்துக் கொள்ளக் கூடியது நம்முடைய செயல் தான். ஆகவே, செயலிலே விளைவைக் காணும் இந்த ஒரு எண்ணத்தை வளர்த்துக் கொண்டால் அவ்வாறு வளர்த்துக் கொண்ட பிறகு எப்பொழுதும் வைத்துக் கொண்டால் இறைவனே நீதான். மனத்திலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டு நிலைக்கிறது. இறைவன் நிலை விட்டு நாம் மாறுவதே இல்லை. ஏனென்றால் எப்பொழுதும் ஏதாவது செயலைச் செய்து கொண்டேதான் இருக்கிறோம். அந்தச் செயலிலே விளைவு வரும். அந்த விளைவு இறைவனுடைய கருணை, இறைவனுடைய வரம் என்பதை உணர்கிற போது எப்பொழுதும் இறைநிலை உணர்வு மாறாதிருக்கும். அதே நேரத்திலே நாம் செய்கிற செயல் மூலமாகப் பிறருக்கு நன்மைதான் வர வேண்டும்; தீமை வரக் கூடாது. இந்தச் சமுதாயம் நமக்கு ஒவ்வொரு நாளும் எத்தனையோ பொருள்களைக் கொடுத்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சமுதாயத்துக்கு எந்த வகையிலும் யாருக்கும் நான் செய்வதும் துன்பமாக இருக்கக்கூடாது. இந்த இரண்டு நோக்கத்தோடு செயலைச் செய்து வந்தால் தொடக்கத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் பழகப் பழக எளிமையாகச் செய்ய இயலும் என்ற அளவிலே வரும். அப்படி வந்து விட்டதானால் இறை உணர்வும் வந்து விடும்; அற உணர்வும் வந்து விடும்.

இறை உணர்வு, அறவழி போதிப்பதற்கு இதுவரையிலே எடுத்த மகான்களுடைய முயற்சிகளெல்லாம் அந்தந்தக் காலத்தில் அந்தந்த இடத்திலே மதம் என்ற பெயரால்வந்தது. பின்னால் வந்தவர்கள் அதனுடைய கருத்தைத் தெரிந்து கொள்ளாத நிலையிலே அந்தந்தக்

காணுதல் என்ற அளவிலே வருகிறபோது இந்த உடலெல்லாம் தெளிந்தபோது மனமும், தூயதாகத் தெளிவாக இருக்கிறது. இருட்டிலே இருக்கின்றபோது அங்கு நல்ல வெளிச்சம் வந்தால் எப்படியிருக்கும்? மேல்தளத்தில் இருந்து படியிலே இறங்குகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். விளக்கு இல்லை, சில சமயம் படிஇருப்பதே தெரியவில்லை என்றால் என்ன வாகும்? ஆனால் படியிருக்கிறது என்று தெரிந்து விளக்கும் இருந்தால் எப்படியிருக்கும்? அதே போல வாழ்க்கையிலே தெரிந்து வாழக் கூடியதும் தெரிந்ததை நடத்தி, திருத்தி நாம் உறுதி எடுத்துக் கொண்டு அந்த முறையிலே வாழ்வதற்கும் ஏற்றதோர் பயிற்சிதான் மன் வளக்கலையாகும்.

அதற்கு மேலாக உடலை நன்கு உறுதியாக வைத்துக் கொண்டு ஆன்மாவை வளர்த்து கொள்வதற்குப் பெருந்துணை புரியும் கலை தான் காயகற்பக்கலை. அதை ஒழுங்காகச் செய்து வந்தால் மனிதன் எந்த நிலைக்கு உயர வேண்டுமோ அந்தநிலைக்கு உயரலாம். குண்டலினியோகம் செய்வதற்கு உயிராற்றல் போதிய அளவு வேண்டும். இதையெல்லாம் உறுதிப் படுத்திக் கொடுக்கக் கூடியது காயகல்பம். காயகல்பம் குண்டலினி யோகத்திற்கு உதவியாக இருக்கிறது. குண்டலினி யோகம் காயகல்பத்திற்கு உதவியாக இருக்கிறது. ஆகவே, இரண்டு வழியாலும் நாம் உடலையும், மனத்தையும் இணைத்து முன்னேறப் பயிற்சி செய்கிறோம். இவை குடும்பங்களுக்கெல்லாம் மிகவும் தேவையானவை.

## பிணக்குகள் தீர வழி

இன்று உலகம் முழுவதும் பார்க்கிறோம்; சிக்கல் இல்லாத இடமே இல்லை. ஏதோ ஒரு சிக்கல், மனத்திலே குறைபாடு ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ளது. சரியாகக் கணக்கெடுத்துப் பார்த்துக் கொண்டோமேயானால் நாமே போக்கிக் கொள்ளக்கூடியவையே அந்தக் குறைபாடுகள் என்பது தெரியவரும்; மனத்தாலே பழக்கத்தாலே ஏற்படுத்திக் கொண்டவையே தவிர உண்மையான குறைபாடாக அவை இருக்காது. ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு அது இல்லையே என்று வருந்திக் கொண்டிருக்கும்போது துன்பம் உண்டாகிறது. இன்று என்ன இருக்கிறது? இதை வைத்துக் கொண்டு நாம் எப்படிச் செயல் பெற முடியும் என்பதை பார்த்தால் இன்னல் அகன்று விடும்!

அதேபோல கணவன் மனைவி உறவிலே இருவரும் ஒருவருக்கொருவர் ஆதரவு தந்தும் உதவிக்கொண்டும் இருப்பதைப் பழக்கமாகவே ஆக்கிக்கொண்டு விட வேண்டும். ஒருவரிடம் நாம் ஒரு உதவிகோருகிறோம் என்றால் அதிலே நான்கு பரிமாணங்கள் உள்ளன.

அவை என்னவென்றால்,

(1) இது தேவை என்று உணர்வது

(2) அந்தத் தேவையிலே அளவை நிர்ணயிப்பது:



(3) இந்தத் தேவையிலே அல்லது தரத்தை செயல்முறையை நிர்ணயிப்பது.

(4) காலத்தை நிர்ணயிப்பது.

இந்த நான்கு அம்சங்களிலே எந்தநிலையிலே இருப்பவர்களிடையேயும் சிறிதளவேனும் வேறுபாடு இருக்கவே செய்யும். அதிலே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒத்துப் போனால் பிணக்கு வராது. சிக்கல் இராது. ஒவ்வொருவரும் இதுதான் வேண்டும், இந்த அளவுதான் வேண்டும். இந்த முறையிலே வேண்டும். இந்தக் காலத்திலேதான் வேண்டும் என்று பிடித்துக் கொள்கிறோம். இந்த ஒரே பிடிவாதம்தான் இந்த உலகம் முழுவதிலும் உள்ள பிணக்குகளுக்கெல்லாம் காரணமாக உள்ளது. அதனாலேதான் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம் என்ற இந்த மூன்று தன்மைகளை வளர்த்து உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் என நான், விரித்து விரித்துக் கூறி வருகிறேன்.

எத்தனையோ நன்மைகள் அடுத்த அன்பர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கிறது. இரண்டு ஒன்றிலே அவர்கள் விருப்பம் போல் செய்தார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். நூறு நன்மைகளை அனுபவிக்கிறபோது இரண்டு நன்மைக்காக நான் விட்டுக் கொடுத்தால் என்ன? இவ்வாறு பொறுத்துப் போவதுதான் சகிப்புத் தன்மை. அதேபோல அவர்கள் செய்வதைச் செய்யட்டும்; எந்த அளவிலே நான் அவர்களுக்கு உதவியாய் இருப்பேன் எனப் பார்த்து எப்பொழுதுமே உதவிக் கொண்டு இருப்பது தான் விட்டுக் கொடுத்தல், சில சமயம் நமக்குச் சிரமம் இருந்தாலும் சரி, அவர்கள் நன்றாய் இருந்தால் போதும், அந்த அளவிற்குக் கடைசிவரையிலே ஒருவருக்கு விட்டுக் கொடுப்பதிலே தவறேதும் இல்லை. இதுதான் தியாகம் என்பது.

உதாரணமாக ஒரு குடும்பத்திலே மகளை தன்னுடைய அண்ணன் மகனுக்கே திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று அம்மையார் விரும்புகிறார், தன்னுடைய தங்கை மகனுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இந்த இடத்திலே யார் எப்படித்தான் விட்டுக் கொடுப்பது? சரி எப்படி

காலத்திற்கு ஏற்றவாறு அவர்கள் சொன்ன சொற்களையும் செயலையும் வைத்துக் கொண்டு அதை வரையறுத்துவிட்டு சடங்குகளாக்கி இதற்கு மேலேயும் போகக் கூடாது, கீழேயும் வரக் கூடாது என்று சட்டம் போட்டு திட்டமிட்டிருக்கிறார்களே அதுதான் மதம். ஆனால் காலத்திற்குக் காலம் நம்முடைய அறிவு வளர்ச்சி ஏற ஏற, பொதுக் கருத்தும் ஏற ஏற, கலாச்சாரமானது பரிணாமம் அடைந்து கொண்டே வருகிறது. அப்படியிருக்க முன்னர் திட்டமிட்டது மேலேயும் வரக்கூடாது, கீழேயும் போகக் கூடாது என்றால் அந்தக் கட்டுத் திட்டத்தை உடைத்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது மனிதன். எனவேதான் இந்த உலகத்திலே எல்லா மதங்களும் ஆடிக் கொண்டிருக்கின்றன. மத அமைப்பிலே இருக்கக் கூடிய தலைவர்கள் ஒரு சிலர் கூட ''நாங்கள் இதனை விட்டு வெளியேறிச் சமுதாயப் பணி செய்யப்போகிறோம்'' என அறிவிப்பதைப் பார்க்கிறோம் அல்லவா?

எந்த மதமானாலும் காலத்துக்குத் தகுந்த மாதிரித் திருத்தம் செய்து கொள்ளக் கூடியதுதான் நிலைத்து நிற்குமே தவிர, அந்தக் கட்டத்திலேயே அப்படியே அடைத்து வைக்க வேண்டும் என்றால் மனிதனுடைய தேவையை ஈடுகட்டவே முடியாது. ஆகவே, இன்றுள்ள எல்லா மதங்களுக்கும் பொதுவாக ஒரு நியதி வேண்டுமானால் செயலிலே விளைவாக இறைவனுடைய ஆஸ்தியைக் காண்பது என்பதுதான் அந்த நியதி. ''என் செயலால், நடத்தையால் சமுதாயத்துக்கு எந்த விதத்திலேயும் துன்பம் வாராது பார்த்துக் கொள்ள வேண்டியது; ''நான் செய்யும் செயலிலே, அடையும் இன்பத்திலே அளவு, முறை மாறாது காத்துக் கொள்வேன்''- இந்தத் தத்துவத்தை மனத்திலே அழுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்; செய்து பாருங்கள். சிரமம் இல்லாத எளிய தத்துவம் இது. ஆனால் விஞ்ஞான ரீதியாகப் புள்ளி நேறக் கூடியது. விஞ்ஞானம் என்றால் என்ன? அனுபவத்தில் காணும்போது உண்மை தெரிவதுதான் விஞ்ஞானம் ஆகிறது. அது இல்லாமலே யூகத்துக்கு வருகிறபோது தத்துவம், இயற்கை விதி இந்த முறையில் இயன்ற வகையிலே மேலும் மேலும் பழகப் பழகி அதை அனுபவத்தில் கொண்டு வரும் போது அந்தப் பயனையெல்லாம் பெற வேண்டுமென்றால் இந்தச் சிந்தனையை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டு செய்து பாருங்கள். ஒப்புக் கொள்ளக் கூடியதாகவும் அமைதியாகவும் வாழ்க்கை இருக்கும்.

குடும்பத்தை நாம் இந்த அமைதியான முறையில் வைத்துக்கொண்டால், நாம் அமைதியாக இருப்பதால் எங்குப் போனாலும் நமக்கு அமைதியாகவே வெற்றியாகவேதான் இருக்கும். அப்படி இல்லை என்றால், எதிர்மறை எண்ணங்கள் அல்லது குழப்பமனம் இருக்குமானால் நாம் எந்தப் பணி மேற் கொண்டாலும் அதில் மனநிறைவான, முழுமையான வெற்றிகிட்டாது.

எனவே, மனத்தை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அதற்குப் பயிற்சி வேண்டும். மனப்பயிற்சி குண்டலினி யோகம்: எளிய முறையிலே இப்போது எங்கும் இருப்பவர்களுக்கும் கிடைக்கும்படியாகச் செய்திருக்கிறோம். அதேபோல செயல் பயிற்சிக்குரிய அகத்தாய்வும் சிந்தனையும எளிய முறையில் கொடுக்கப் பெற்றுள்ளன. குடும்பத்தோடு இருந்து அதைச் செய்து வெற்றி பெற்று வாழ்க்கையை நலமாக்கிக் கொள்ளலாம். அப்படிச் செய்யும்போது, இனி பிறக்கக் கூடிய குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகப் பிறக்கும்; நமக்கு எதிர்ப்பில்லாத குழந்தைகளாகப் பிறக்கும்; சமுதாயத்துக்கு ஏற்ற நல்ல குடிமக்களாகத் தோன்றுவார்கள். இதைக் காணும்போது தாய் தந்தையர்களுக்கு நல்ல மன அமைதியும், வெற்றியான, அமைதியான வாழ்வும்கிட்டும். நீங்கள் எந்தத் துறைக்குச் சென்றாலும் அந்தத் துறையிலே சிந்தனை வளம் உள்ளவர்களாக, அமைதியான ஒருமைப்பாடு வேண்டுமல்லவா மனத்துக்கு? அது வேண்டுமானால் பயிற்சி மூலயாகத்தான் பெற முடியும். தியானம், அகத்தாய்வு, உடற்பயிற்சி இவற்றிற்குத் தினந்தோறும் சிறிது நேரம் ஒதுக்கி நீங்கள் எல்லோரும் வாழ்வை வளமாக்கிக் கொள்ள வேண்டும்.

## உலகம் நிலைத்திருப்பது எதனால் ?

**தேவாமிர்தமாயினும் பிறருக்குப் பங்கிட்டுத் தந்து உண்பர்;**

**கோபத்தைக் கடிவர் ;**

**புகழ்மிக்க காரியங்களுக்காக உயிரையும் கொடுப்பர் ;**

**பழியான காரியம் எனில் மூவுலகைக் கொடுப்ப தானாலும் செய்யார் ;**

**தன்னலம் மறந்து பொது நலம் சிறக்க பாடுபடும் மக்கட் பண்பு மிக்கவராம் ;**

**சான்றோர் சிலர் வாழும் காரணத்தாலேயே உலகம் அழியாமல் நிலைபெற்று வாழ்ந்து வருகிறது.**

— புறநானூறு



நான் போய் பார்த்துத் தண்ணீருடன் வருகிறேன் அண்ணா
பொய்கை உள்ள இடம் தேடிவரும் வீமன் கரையில் அருச்சுனன் மாண்டு கிடப்பதைக் கண்டு துடிக்கிறான்
அருகருகே நகுல சகாதேவர்களும் மாண்டு கிடக்க அவர்களை வாரி அணைத்துத் துடிக்கிறான் வீமன்
சித்திர பாரதம்
க. வ. செவ்வேள்
M.N.Raja
பொய்கையின் நீர் நச்சு நீராக இருக்கும் என்று தெளிகிறான் வீமன். "அண்ணா இது நச்சு நீர்! பருக வேண்டா" என மணலில் எழுதி வைத்து...
சந்துருகாதினி கதையால் நீரைமோதி தெறிக்கும் நீர்த்துளிகளைப் பருகி உயிர் விடுகிறான் வீமன்.
தாங்க முடியாத நீர் வேட்கையால் தருமரும் மூச்சு பேச்சின்றிக் கிடக்க காளமாமுனிவர் ஏவிய பூதம் அங்கு வந்து தருமரைக் கண்டு உயிர் நீங்கினார் என அகன்று போகிறது.
நச்சுப் பொய்கையின் கரையில் மற்ற வீமார்ச்சுன நகுல சகாதேவர்களும் மாண்டுகிடக்கக் காணும் பூதம் கோபத்தால் கொதிக்கின்றது.


வந்த வேகத்தில் அபிசாரயாகம் புரிந்த காளமை முனிவரிடமே திரும்பிச் செல்லும் பூதம்
"ஏ முனிவா! இறந்து கிடப்பவர்களைக் கொன்று வர ஏன் என்னை ஏவினாய்" எனக் கேட்டு சூலாயுதத்தால் அவன் தலையைக் கொய்து ஓமகுண்டத்திலேயே விழுந்து மறைந்து போய் விடுகிறது
பூதம் மறைந்ததும் சுயநினைவு திரும்பிடும் தருமர் பொய்கைக்கு வந்து அங்கு மாண்டு கிடக்கும் தம்பிகளைக் கண்டு வருந்துகிறார் "நச்சுநீர் பருக வேண்டா" என்ற வீமனின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் நச்சுநீரைப் பருகி உயிர் விடத் துணிகிறார் தருமர்
"நில் தருமா! நச்சு நீரைப் பருகாதே" என தருமரைத் தடுக்கும் அசரீரி பல வினாக்களை வினவுகின்றது.
தவத்தில் சிறந்த தவம் எது
நல்லொழுக்கமே நற்றவம்
செல்வர்க்குப் பாதுகாவல் ஆவது எது?
ஈகை
பொன்றாமல் நிற்பது எது?
புகழ்
தொழில் அனைத்திலும் இழிந்தது எது?
இரத்தல்
அசரீரியாக வினா தொடுத்த யமன், தருமருக்கு நேரிலும் அதிரூபனாக காட்சியளிக்கிறான்
உன் தம்பியரில் ஒருவரை உயிர்ப்பிக்கிறேன் யார் வேண்டும் கேள்?
சகாதேவனை உயிர்ப்பித்துத் தாருங்கள்
குந்திபெற்ற மக்களில் நான் ஒருவன் உளன் அன்னை மாத்திரி பெற்ற மக்களில் ஒருவரான சகாதேவனை வேண்டுகிறேன்.
தருமா! உன் நடுவுநிலைமையைப் போற்றுகின்றேன் உன் தம்பிகள் அனைவரும் இனி உயிரோடு எழுவர்




"கோயில் கலைச் செல்வர்"
**தி. இராசமாணிக்கம்,** பி.ஏ., பி.காம்.,

இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளில் ஒன்றான கௌமாரத்தில் முருகனே முழுமுதற் கடவுளாகப் போற்றி வணங்கப்படுகின்றான். தமிழ்க் கடவுள் எனச் சிறப்பிக்கப் பெறும் இந்தக் கடவுள் அழகில் நிகரற்றவன். 'ஆயிரங்கோடி மன்மதன்களின் அழகெல்லாம் ஒருங்கே திரண்டாலும், வேற்படை விமலனாகிய முருகனின் திருவடிகளின் அழகுக்கு ஈடாகாது என்றால், அவனதுமாபெரும் வடிவிற்கு உவமை சொல்ல இயலாது என அவனது பரம வைரியாக ஒரு காலத்தில் இருந்த சூரபன்மனே வியக்கிறான் என்றால் அவன், அழகில் ஒப்பாரும் மிக்காரும் அற்றவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

முருகனது திருவுருவங்களை எவ்வாறு அமைக்க வேண்டும் என்று விதிகளை வகுக்கும் ஆகமங்களில் குறிப்பிடத்தக்கவை "குமார தந்திரம்" மற்றும் "ஸ்ரீதத்வநிதி"யாம். 'குமார தந்திரத்தில் 16 வடிவங்கள் கூறப்பட்டுள்ளன. இதில் சொல்லப்பட்ட சிலவடிவங்களை வேறு வகையில் அமைக்க "ஸ்ரீதத்வநிதி" யில்விதிகள் உள்ளன. இவையேயன்றி, "ஸ்ரீதத்வநிதியில்' மேலும் 6 வடிவங்கள் கூறப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 22 வடிவங்களாம்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆகமங்களில் சொல்லப்பட்ட 22 வடிவங்களினின்றும் வேறுபட்ட வடிவங்கள் தமிழகத்தில் ஆங்காங்கு உள்ள பலதிருக்கோயில்களில் உள்ளன. ஆகமத்தில் கூறப்பட்ட சில வடிவங்கள் அரிதாகக் காணப்படுகின்றன. சில கலை அழகு மிளிர உருவாக்கப் பெற்றுள்ளன. நான் நேரில் கண்ட திருவுருவங்களை மாவட்ட வாரியாக கீழே கொடுத்துள்ளேன். "கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகு அளவு" என்ற ஆன்றோர் வாக்கின்படி இன்னும் எத்தனையோ அரிய திருவுருவங்கள் இருக்கலாம்.

**கோவை மாவட்டம் :**

ஓதிமலை; மேட்டுப் பாளையத்திற்கு அருகே உள்ளது. இங்குள்ள மூலவர் 5 தலைகள் 8 கைகளுடன் எழில் வடிவமாகக் காட்சி அளிக்கிறார்.

செஞ்சேரிமலை; உடுமலை - பல்லடம் வழியில் உள்ளது. 6 தலைகள் 12 கைகள் கொண்ட மூலவர்: இடக்கை ஒன்றில் கடக முத்திரையில் கோழியை ஏந்தியுள்ளார்.

கனககிரி: திருப்பூரை அடுத்துள்ள இங்குள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள முருகன் தண்டாயுதபாணி திருக்கோலத்தில் உள்ளான். இடுப்பில் வைக்கப்பட்ட இடக்கையில் கிளி காணப்படுகிறது.

வெள்ளிமலை; திருப்பூரை அடுத்துள்ள இங்கும் முருகனது தண்டாயுதபாணி திருக்கோலத்தில் இடக்கையில் கிளி அமைக்கப்பட்டுள்ளது.

**பெரியார் மாவட்டம்:**

சென்னிமலை: ஈரோடு - தாராபுரம் வழியில் உள்ள இந்தத்தலத்தில் "ஸ்ரீதத்வநிதி" யின்படி 4 திருவுருவங்கள் உள்ளன.

அக்னிஜாத சுப்ரமணியன்; அறுமுகன் அக்னியின் மகன் என்பதற்கு ஏற்ப 2 தலைகள் 8 கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளான்.

சௌரபேய சுப்ரமணியன் : இந்த வடிவிற்கு 4 தலைகள் 6 கைகள் காணப்படுகின்றன.

சரவணபவன்: தலையில் அழகிய கொண்டை உடைய இவனுக்கு ஒருதலை, 6 கைகள் உள்ளன. இவனுக்குப் பின்னால் சிங்க ஊர்தி காணப்படுகிறது.

தேவசேனாபதி : ஒரு தலை 4 கைகள் கொண்ட இவனுக்கு இவனது மாமனான திருமாலைப் போன்று பின் இருகைகளில் சங்கு சக்கரம் அமைக்கப்பட்டுள்ளன.

கைத்தமலை : ஊத்துக்குழியை அடுத்து இந்த மலை மீது எழுந்தருளியுள்ள மூலவரின் இரு கைகளில் இடக்கை கோழியுடன் இடுப்பில் காணப்படுகிறது.

**சேலம் மாவட்டம்:**

கொல்லிமலை: பேளுக்குறிச்சியை அடுத்துள்ள கொல்லிமலைச்சாரலில் உள்ள பழனியப்பர் கோயிலில் முருகன், தலையில் கொண்டையுடனும் இடக்கையில் கோழியுடனும் வேட்டுவ கோலத்தில் எழுந்தருளியுள்ளான்.

**தென்னார்க்காடு மாவட்டம் :**

சிதம்பரம் : சூர்பாதடிந்தோன்; இங்குள்ள கோவிலில் மேற்கு கோபுரத்தில் 10 கைகளுடன் சூரபன்மனுடன் போர் புரியும் நிலையில் மாமயிலோன் அமைக்கப்பட்டுள்ளான்.

பிணிமுக ஊர்தியான்; கீழக் கோபுரத்தில் ஒரு தலை 4 கைகளுடன் யானை மீது உட்கார்ந்தபடி முருகன் காணப்படுகிறான்.

சேந்தமங்கலம்: திருச்சி-சென்னை நெடுஞ் சாலையில் மடப்பட்டை அடுத்துள்ள சிவாலயத்தில் 6 தலைகள் 6 கைகளுடன் கார்த்திகேயன் திருவுருவம் உள்ளது.

**செங்கற்பட்டு மாவட்டம்**: திருப்போரூர் ; சென்னை-மாமல்லபுரம் வழியில் உள்ளது. இவ்வாலயத்தில் பல அரிய வடிவங்கள் உள்ளன.

வில்லேந்திய வேலன்: தனது வலது காலை மயில்மீது வைத்து வில்லை ஏந்தும் வேலனின் வடிவம்.

தகப்பன் சாமி: தனது தந்தையான சிவ பெருமானுக்குப் பிரணவப் பொருளை உபதேசிக்கும் திருவுருவம். இருவரும் ஒரே பீடத்தில் உருவாக்கப்பட்டுள்ளது அரிய அமைப்பாம்.

சிங்கஊர்தியான் : பிரமசாத்தா திருவுருவிற்குப் பின்னால் சிங்கம் காணப்படுகிறது.

ஆடு ஊர்தியான் : முருகனது திருவுருவிற்குப் பின் ஆடு அமைந்துள்ளது ஒருஅரிய படைப்பாகும்.

தமிழ் ஆசான் : இங்குள்ள தூண் ஒன்றில் தமிழ் முனியாம் அகத்தியருக்கு முருகன் தமிழ் கற்பிக்கும் திருவுருவம் உள்ளது.

நடனவடிவம்: இன்னொரு தூண் ஒன்றில் தனி நடம்புரி சமரமுருகனது திருவுருவம் காணப்படுகிறது.

**திருவேற்காடு** : சென்னை அடுத்துள்ள வடவேதாரண்யம் என்ற கோயிலில் வில்லேந்திய வேலன் தனது வலது காலை மயில் மீது வைத்துள்ளான்.

ஆண்டார்குப்பம் : சென்னை-பொன்னேரி வழியில் உள்ளது. இங்கு மூலவர் இரு கைகளுடன் பிரமனிடம் பிரணவப் பொருளை கூறும்படி கேட்கும் திருக்கோலத்தில் காணப்படுகிறான்.

பாகசாலை: சென்னை - அரக்கோணம் வழியில் உள்ளது. பிரமசாத்தா திருவுருவில் முருகன் மூலவராக எழுந்தருளியுள்ள ஒரு சில தலங்களில் இது ஒன்று.

ஆனூர்: செங்கல்பட்டை அடுத்துள்ளது. அங்கு கையில் மலருடன் பிரமசாத்தா வடிவில் முருகன் மூலவராக காணப்படுகிறான்.

உத்திரமேரூர் : காஞ்சிபுரத்தை அடுத்துள்ள இங்கு ஒரு தலை 4 கைகள் கொண்ட முருகனது தவக்கோலத்தை மூலவராகக் காணலாம்.

காஞ்சிபுரம்: 5 தலைகள் கொண்ட பாம்பு குடையாக உடைய முருகனது திருக்கோலம். இத்தகைய வடிவங்கள் கர்நாடக மாநிலத்தில் உடுப்பியில் காணப்படுகின்றன.

பெரும்பேடு: பொன்னேரியை அடுத்துள்ள இங்கு வள்ளி தெய்வயானை இருவரும் இடம் மாறி முருகனுக்கு இடம் வலமாக உள்ள அரிய அமைப்பு உள்ளது.

சிறுவாபுரி: சென்னை நாகலாபுரம் வழியில் உள்ளது. முருகன் தன் தந்தையைப் போன்று கையில் கபாலத்துடன் காட்சி அளிக்கிறான்.

**சென்னை மாவட்டம்** : திருவொற்றியூர் : ஒரு தலை 6 கைகள் கொண்ட முருகனது திருவுருவம் காணப்படுகிறது.

மைலாப்பூர்: சென்னையில் உள்ள கபாலீசுவரர் திருக்கோயிலில் முருகன் மயில் மீது, அமர்ந்து இருக்க, இரு துணைவியரும் இருபுறமும் யானை மீது காணப்படுகின்றனர்.

**வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்**: மேல்பாடி: வள்ளிமலையை அடுத்துள்ளது. இங்குள்ள அரிஞ்சிய சோழீசுவரம் என்ற கோயிலில் யானை மீது முருகனது பிரமசாத்தா வடிவம் உள்ளது.

**திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்** : திருவண்ணாமலை ; ஏனைய திருவுருவங்கள் போலன்றி இங்குள்ள வில்லேந்திய வேலனுக்கு ஒரு தலை 6 கைகள் அமைந்துள்ளன.

**திருச்சி மாவட்டம்** : பழுவூர் திருச்சி அரியலூர் சாலையில் உள்ளது.

அகத்திசுவரம், அருணாசலேசுவரம் : இந்த இருகோயில்களிலும் முருகனது திருவுருவங்களின் தலைகளில் அமைக்கப் பெற்றுள்ள கிரீடங்களை மாலைகள் அலங்கரிக்கின்றன.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் : இங்கு எழுந்தருளியுள்ள முருகன் 4 கைகளில் ஒரு கையில் கோழியை ஏந்தியுள்ளான்.

கங்கை கொண்ட சோழபுரம் : ஆகம விதிகளின்படி அமைக்கப் பெற்ற முருகனது குமரனின் திருவுருவம் அழகு மிக்க செப்புச் சிலை வடிவில் உள்ளது.

திண்ணியம் : லால்குடியை அடுத்துள்ளது. இங்குள்ள முருகனும் அவனது இருதுணைவியரும் தனித்தனியே மூன்று மயில்கள் மீது அமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர்.




கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்**

## [20]

வேதியரை இகழ்ந்ததால் வேதபாராயணங்கள் தடைபட்டன. வேள்விகள் நின்றன. அதனால் மாரி குறைந்தது. வேதம் ''பசுவும் பார்ப்பானும் வாழ உலகம் வாழும்'' எனக் கூறியது. பசு இறைவனுக்கு யாகமூலம் அளிக்கும் ஆகுதிக்கான நெய் கொடுப்பதாலும், அந்த நெய்யை வேதமோதும் பார்ப்பனன் மந்திரங்கள் கூறி அக்கினியில் அளிக்க, அக்கினியை முகமாகக் கொண்ட தேவதைகள் அவற்றைப் பெற்று மகிழ்ந்து மழையை அளிக்க மன்னவன் சிறப்படைந்தான். தீயவை எல்லாம் மறைந்து இறைவன் நாமம் உலகில் பரவியது என்ற கருத்தை

''வாழ்க அந்தணர்! வானவர்! ஆனினம்!
வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.''

எனத் தமிழ் வேதத்தின் ஒரு அங்கமான தேவாரம் கூறுகிறது. வேதம் ஓதக் கூடியவர் யாவரும் வெவ்வேறு தொழில்களைச் செய்ய ஆரம்பித்தனர். சிலர் வேறு நாடுகளுக்கும் சென்றனர். நாடு நலம் குலைந்தது. இது கண்டு வருந்திய பாண்டியன் கோயிலையடைந்து இறைவனிடம் நாட்டின் நிலையைக் கூறி வருந்தி முறையிட்டான். சிவபெருமான் வாளாவிருந்தார். அன்றிரவு பாண்டியன் கனவில் இறைவன் தோன்றி ''நம்மீது பக்தி குறையாது செங்கோல் செலுத்தும் உன்மீது ஒரே ஒரு குறை உள்ளது. அதனால் மாரி குறைந்து பஞ்சம் ஏற்பட்டுள்ளது. நீ வேதமோதும் வேதியரை இகழ்ந்தாய், உன் நாட்டில் வேள்வித் தவம் குறைந்தது.

''மறையே நமது பீடிகையாம்! மறையே நமது
பாதுகையாம்
மறையே நமது வாகனமாம்! மறையே நமது
நூபுரமாம்
மறையே நமது கோவணமாம் மறையே நமது
விழியாகும்
மறையே நமது மொழியாகும்! மறையே நமது
வடிவாகும்''

''வேதமோதக்கூடிய பெரியோர்களை எனது உருவாகக் கொண்டு அரசு புரிவாய்'' என்று கூறி (எடுக்க எடுக்கக் குறையாத பொன் முடிப்பு) உலவாக்கிழி ஒன்றை அளித்து மறைந்தார். விழித்தெழுந்த பாண்டியன் உலவாக்கிழியைக் கண்டெடுத்துப் பூசித்து மகிழ்ந்து வேதத்தையும் வேதியரையும் ஏனையோரையும் ஆதரித்து வாழ, பாண்டிநாடு மழை பெற்று, வளமடைந்து விளங்கியது.

ஒரு சமயம் சிவபெருமான் தாருகா வனத்திலுள்ள ரிஷிபத்தினிகளின் கற்பு நிலையைச் சோதிக்கத் திருவுள்ளம் கொண்டார். (தாருகா வனத்திலிருந்த முனிவர்கள் சிவபெருமானை அலட்சியம் செய்து வேள்வியே பெரிது என்ற கர்வத்துடன் இருக்க, அவர்களது மனைவிமார்கள் தமக்கு நிகராகக் கற்புடையவரே கிடையாதென்றிருக்க, அவர்களது கர்வத்தை ஒழிக்கச் சிவபெருமான் பிட்சாடன வேடம் கொண்டு, திருமாலை மோகினியின் உருவத்தை எடுத்து வருமாறு செய்து தன்னுடன் அழைத்துவர, முனிவர்கள் மோகினியைக் கண்டு மயங்கியதாகவும் ஒரு வரலாறு உண்டு. வேதத்தைக் கோவணமாகவும், திருநீறு பூசிக்கொண்டு, எழுது சித்திரம்போல் அசையாமலிருந்தே பாடிக் கொண்டும், புன்முறுவலுடன் கிண்கிணி தரித்த பாதங்களில் பாதுகையணிந்து கையில் கபோலமும் டமருகம் என்னும் உடுக்கையும் ஏந்தி வரலானார்.

''வேதமசைக்கும் கோவணமும் மெய்யில் நீறும்
உள்ளாளக்
கீதமிசைக்கும் கனிவாயும் உள்ளே நகையும்
கிண்கிணிசூழ்
பாதமலரும் பாதுகையும் பலிகொள்கலனும்
கொண்டுஇருதி
மாதர் கணவர் தவவேடம் எடுத்தால் ஒத்து
வரும் எல்லை.''

ரிஷிபத்தினிகள் அவருக்குப் பிச்சையிட வந்து, அவரது அழகில் ஈடுபட்டு, உடல் மெலிந்து, கையிலிருந்து வளைகள் தாமாகக் கழன்று விழ, வசமிழந்து நின்று பேசலாயினர். அவர்களது கேள்விகளுக்கு இறைவன் பதில் கூறும் இதனைச் ''சல்லாபக் கவி'' என்பர். ஒரே சொல்லுக்கு இருபொருள் பொதிந்து வரும் இறைவனது அழகில் ஈடுபட்டுக் கடுமோகங் கொண்டதால் அவர்களது உடல் மெலிந்து கைகளிலிருந்த வளைகள் கழன்று விழுந்தன

**தஞ்சை மாவட்டம்** : திருக்கண்டியூர்: தஞ்சையை அடுத்துள்ளது. அக்க மாலையுடன் ஞானஸ்கந்தரும், கையில் சக்தி மற்றும் மல ருடன் கூடிய வீரஸ்கந்தரும் வாயிற் காப்போர் களாக உள்ளனர்.

திருவிடைக்கழி: சிதம்பரம்-காரைக்கால் வழியில் உள்ளது. இங்குள்ள வில்லேந்திய வேலனுடன் மயில் அமைக்கப்படவில்லை.

திருவழுவூர்: திருமயிலாடுதுறையை அடுத் துள்ளது. இங்குதன் தாயான பராசக்தியின் இடுப்பில் குழந்தை வடிவில் முருகன் காணப்படு கிறான்.

பல்லவனீசுவரம் : காவிரிப் பூம்பட்டினத் தில் உள்ள இந்தக் கோயிலில் தன் தாயுடன் முருகன் ஒரே பீடத்தில் அமைக்கப்பட்டுள் ளான்.

திருவாரூர்: பராசக்தியின் அருகில் நிற்கும் சேடியின் தோள்மீது முருகன் குழந்தை வடிவில் காணப்படுகிறான்.

கும்பகோணம்: இங்குள்ள ஆதிகும்பேசு வரர் திருக்கோயிலில் 6 தலைகள் 6 கைகள் கொண்ட கார்த்திகேயன் வடிவம் உள்ளது.

கோடிக்கா: வேதாரண்யத்தை அடுத் துள்ளது. இங்குள்ள ஒரு தலை 6 கைகள் கொண்ட முருகன் ஒரு கையில் அமிர்த கல சத்தை வைத்துள்ளான்.

பொரவச்சேரி : திருவாரூர் - நாகப்பட்டி னம் சாலையில் உள்ளது. 6 தலைகள் 12 கைகள் கொண்ட முருகன் மயில் மீது அமர்ந் துள்ள திருவுருவம் கலைச்சிறப்பு மிக்குள்ளது. ஆகமத்தின்படி அமைந்துள்ள இந்த வடிவின் அழகு ஈடு இணையற்றது.

தஞ்சை : பெரிய கோயிலில் ஒரு தலை 12 கைகள் கொண்ட முருகனது திருவுருவம் யானை மீது காணப்படுகிறது.

செம்பொனார் கோயில் ; திருமயிலாடு துறையை அடுத்துள்ளது. இங்குள்ள கோயி லில் முருகனது தவக்கோலம் காணப்படுகிறது.

திருநனிபள்ளி: செம்பொனார் கோயிலை அடுத்துள்ளது. ஒரு தலை 8 கைகளுடன் முருகன் மயில்மீது அமர்ந்து சூரபன்மனுடன் போர் புரியும் நிலை சிறிய சிற்பமாகச் செதுக் கப்பட்டுள்ளது.

சாயாவனம்; காவிரிப் பூம்பட்டினத்திற்கு அருகில் உள்ளது. இங்குள்ள வில்லேந்திய வேலனின் திருவுருவிற்கு அருகில் மயில் காணப் படுகிறது.

திருவையாறு : இங்கு நின்ற திருக்கோலத் தில் வில்லேந்திய வேலனுக்குப் பின்புறம் அவனது ஊர்தியான மயில் அமைக்கப்பட் டுள்ளது.

## நோயற்ற வாழ்வு தருபவன் முருகன்

நோயுற்று அடராமல்
நொந்துமனம் வாடாமல்

பாயிற் கிடவாமல்
பாவியேன் காயத்தை

ஓர் நொடியில் நீக்கி
ஒண்போரூர் ஐயா உன்

சீரடியின்கீழ் வைப்பாய்
தெரிந்து

—**சிதம்பர சுவாமிகள்**

பட்டீசுவரம் : கும்பகோணத்தை அடுத் துள்ளது. இங்குள்ள வில்லேந்திய வேலன் தனது இடது காலை தன் ஊர்தியான மயில் மீது வைத்துள்ளான்.

தாராசுரம் : கும்பகோணத்தை அடுத் துள்ளது. தலைகள் 6 கைகள் கொண்ட கார்த்திகேயன் வடிவம் இங்கு காணப்படு கிறது.

**தேவர் திருமகனார் மாவட்டம்**: குன்றக் குடி: திருப்புத்தூர் - காரைக்குடி வழியில் உள்ளது. முருகனும் அவனது இருதுணைவிய ரும் தனித்தனியாக மூன்று மயில்கள் மீது அமர்ந்த நிலையில் மூலவர்களாகக் காட்சி அளிக்கின்றனர்.

**மதுரை மாவட்டம்** : ஆனைமலை: மதுரை-மேலூர் சாலையில் உள்ளது. இங்கு உருவாக்கப் பெற்றுள்ள குடைவரைக் கோயி லில் முருகன் மற்றும் தெய்வயானை ஆகிய இருவரின் அழகிய திருவுருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

**திருநெல்வேலி மாவட்டம்**: கழுகுமலை : சங்கரன்கோயில் - கோவில்பட்டி சாலையில் உள்ளது. ஒரு தலை 6 கைகள் கொண்ட முருகன் மயில்மீது அமர்ந்து மூலவராகக் காட்சி அளிக்கிறான்.

சங்கரன்கோயில் : இங்குள்ள சங்கர நாராயணர் சந்நிதியில் "குமாரதந்திரம்" என்ற நூலின்படி சக்திதரன், கந்தன், சேனாபதி, கார்த்திகேயன், குமரன், சண்முகன், தாரகாரி, சேனானி, பிரமசாத்தா, வள்ளி கல்யாண சுந்தர மூர்த்தி, பாலசுவாமி, கிரவுஞ்சபேதனன் மற்றும் சிகிவாகனன் என்ற முருகனது 16 திருவுருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப் பெற் றுள்ளன.



ரிஷிபத்தினிகள்: ஐயா! எங்கள் வளையை (கைவளையை)த் தாருங்கள்!

சிவபெருமான்; அது உங்கள் கழுத்தில் உள்ளது. (வளை-சங்கு, பெண்களின் கழுத்தைச் சங்கிற்கு உவமையிடுவர்) ரிஷிபத்தினிகளின் உடல்கள் இளைத்து அவர்களது ஆடைகள் கழன்றன. அதனால் அவர்கள் ''எமது கலையினை (ஆடையை)க் கொடும்'' என்றனர்.

சிவ: கலை (சந்திரகலை) உங்கள் சந்திரன் போன்ற முகத்தில் உள்ளது'' என்றார்.

''மடமயிலனையார் எங்கள் வளையினைத்
தருதி என்றார்.
கடல்விடமுண்டான் உங்கள் கந்தரத்து
உள்ளதென்றான்
தடமதில் கொம்பனார் எம் கலையினைத்
தருதி என்றார்
முடமதி மதிமிலைந்தான் உங்கள்
முகமதியிடத்தது என்றான்''

ரிஷி பத்தினிகள்: இடையறிந்து (சமயமறிந்து) எம்மை ஏற்றுக் கொள்ளும் என்றார்.

சிவ: உங்களுக்கு இடை (இடுப்பு) ஏது என்றார்.

ரிஷிபத்தினிகள்: எங்களுக்குத் (திரும்பிச் செல்ல) விடை கொடும்.

சிவ: எமது விடை (ரிஷபம்; திருமால்) கடலில் உறங்குகின்றது.

''இடையறிந்து எம்மைச் சேர்மின் என்றனர்
இளையர்! எங்கோன்
கடலமுதனையீர்! நுங்கட்கு இடையினிக்
காணாது என்றான்
மடவலார் அஃதேல்பண்டை வண்ணமீந்து
இல்லிற் சென்று
விடையளித் தருள்மின் என்றான்வேலைபுக்கு
உறங்கும் என்றான்''

ரிஷிபத்: உமக்கு நடுவு (நடுநிலை)கிடையாதோ?
சிவ: நடுவில்லாமை (இடை இல்லாத தன்மை) பெண்களான உங்களுக்குத்தான்.

ரிஷிபத்: உமது நெஞ்சு கல்லை யொக்கும் போலும்.

சிவ: உங்கள் மார்பே கல்லையொக்கும்.

''நங்கையர் கபாலிக்கு என்றும் நடுவிலை
போலும் என்பார்
அங்கணன் நடுவிலாமை நும்மனோர்க்கு
அடுத்தது என்றான்.
மங்கையர் அடிகள் நெஞ்சம் வலியகற்போலும்
என்றார்
கொங்கலர் கொன்றையான் 'நுங்கொங்கையே
வன்கல் என்றான்.''

ரிஷிபத்: நீங்கள் கங்கையை (ஆற்றை) சுமந்தது ஏன்?

சிவ: அது உங்களிடம் (கம்-தலை-கை; தலையோடு) பிச்சை ஏற்கவே.

ரிஷிபத்: இவர் செப்பியது (கூறியது) எப்படியிருக்கிறது?

சிவ: அது (செப்பு-சொல்செப்பு-கிண்ணம்) அது உங்களை மார்பைப் போலிருந்தது.

''காதுவேலன்ன கண்ணார் கங்கைநீர் சுமந்தது
ஏதுக்கு
ஓதுமின் என்றார்; நும்பால் உண்பலி ஏற்க
என்றான்,
ஏதுபோலிருந்தது ஐயன் இசைந்த செப்பு
என்றார்; ஈசன்
கோதுறா அமுதன்னீர் உம்கொங்கை
போலிருந்த தென்றான்.''

ரிஷிபத்: உமது கழுத்து (கந்தரம்) ஏன் கறுத்திருக்கிறது?

சிவ: மழைபெய்வதற்காகத்தான் கந்தரம் (மேகம்) கறுக்கும்.

ரிஷிபத்: உமது உத்தரம் (பதில்தான்) என்ன?

சிவ: தெற்கிருந்து பார்த்தால் உத்தரம் (வடக்கு) தெரியும்.

''கறுத்ததை என்கொல் ஐய! கந்தரம் என்றார்
வேளை
வெறுத்தவன் மாரி பெய்வதற்கு என்றனன்;
வேலை
ஒருத்தவர் யாவது என்றீர் உத்தரம் என்றார்
கூற்றைச்
செறுத்தவன் தென்பால் நின்று நோக்கினால்
தெரிவது என்றான்.''

அந்தப் பெண்கள் இறைவனது கண்களுக்குள் தமது உருவம் தெரிவது கண்டு 'எம்மையும் உங்கள் கண்ணுக்குள் வைத்துக் கொள்ள வேணும்' என்ன, இறைவன் அப்பெண்களின் கண்களுக்குள் தமது வடிவைக் கண்டு ''நம் போன்ற அழகன் உங்கள் கண்களிலேஉள்ளான். அவரைப்பாரும்'' என்றான். பெண்கள் கை குவித்து அவர் பின்னரே ஓடிவர, இறைவன் ஓடிக்கொண்டே சென்று மறைந்தனர். ரிஷி பத்தினிகள் ''எமது வளையைக் கொடும்'' எனப் புலம்பிக் கொண்டே திகைத்து நின்றனர்.

அந்நிலையில் அவர்களது கணவன்மார் அங்கு தோன்றி நிலையழிந்து நிற்கும் தம் மனைவியரின் நிலைகண்டு, வந்து சென்றவர் சிவபெருமான் என்பதையும் அறிந்து வருந்தி ''கருத்திழந்த நீங்கள் மதுரையில் வணிகர் வீட்டுப் பெண்களாகப் பிறப்பீர்களாக'' எனச் சாபமிட அந்தப் பெண்கள் சாபநீங்கும் தன்மை எப்போது எப்படி என வருந்திக்கேட்ப ''சோமசுந்தரப் பெருமான் உங்களை தீண்டும் அன்று உங்களை இச்சாபம் நீங்கும்'' என்றனர். அவ்வாறே அவர்கள் மதுரையில் வணிகர் வீட்டுப் பெண்களாகப் பிறந்து, வளர்ந்து, தக்க பருவமடைந்து விளங்கினர். அவர்களை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவன் சடையிலுள்ள கங்கை, தனது கறுத்த கழுத்து,

---

## பொய்யும் - மெய்யும்

**இருப்பதுபொய் போவது மெய் என்றெண்ணி**
**நெஞ்சே**
**ஒருத்தருக்கும் தீங்கினையுன் னாதே—**
**பருத்த தொந்தி**
**நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள்**
**பேய்க்கழுகு**
**தம்மதென்று தாமிருக்கும் தான்.**

— பட்டினத்தார்.

---

நெற்றிக்கண், தன்னொருபாலிருந்த அம்மை வடிவம், மான் மழுமுதலானவற்றை மறைத்து ஒரு வளையல் வியாபாரியின் உருவோடு தோன்றினார்.

''கங்கை கரந்து மணிகண்டம் கரந்து
நுதற்கண் கரந்து ஒருபால்
மங்கை வடிவும் கரந்து உழை மழுவும் கரந்து
மழவிடையூர்
அங்கணழகர் வளைவணிகராகி ஏனம்
அளந்தறியார்
செங்கமலச் சேவடி யிரண்டும் திரைநீர்
ஞாலமகள்சூட''

முன்னரே ரிஷிபத்தினிகளிடம் கவர்ந்த வளையல்களை மீண்டும் திரும்பக் கொடுக்கிறேன் என்பது போல, பட்டுக் கயிற்றில் பல வளைகளைக் கோர்த்துத் தோளில் சுமந்து வந்தார் ; அடியார்கள் பல வண்ணமுள்ள மாலைகளை அவருக்கு அணிவித்த மாதிரி வளைகள் அவரது தோள்களில் விளங்கின.

வணிக மகளிர் அவர் முன்வந்து வளை யிடுமாறு தத்தம் கைகளைநீட்டினர். வளையல் வியாபாரி அவர்களுக்கு வளையல்களை இட, அவரைக் கண்டு ஆசை கொண்ட அம்மகளிரின் உடல்கள் இளைத்து அவர்களது கைகளிலிருந்து வளையல்கள் கழன்று விழ, மீண்டும் சிறியவைகளான வேறு வளையல்களை அணிவிக்க அவைகளும் கழன்றன. ''இம்மாதிரி வளையல்களை நாங்கள் கண்டதேயில்லை, நாளையும் வளையல்களிட மீண்டும் வாரும்'' என்றனர். ''இட்ட வளையல்களுக்குப் பணம் வாங்கிக் கொண்டு போம்'' என்று கூற, 'பின்னால் வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்'' எனக் கூறிக் கொண்டே மறைந்தவர், திடீரென்று அவர்களுக்குச் சிவபெருமானாகக் காட்சி தந்தார்.

இறைவனால் தீண்டப் பெற்ற அப் பெண்கள் கருப்பவதிகளாகி நன்மக்களைப் பெற்று வாழ்ந்தனர். பின்னர் சிவபெருமானின் திருவடிகளை அடைந்தனர்.

—(தொடரும்)

# சொர்க்கம்




**டாக்டர் பொன். சௌரிராஜன்**
**தமிழ்த் துறைத் தலைவர்,**
**திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி**


திருமணத்தில் பலர் கூடி உண்கிறோம். டெண்வீட்டார், மாப்பிள்ளை வீட்டார், இரு வீட்டாருக்கும் வேண்டிய உற்றார் உறவினர், நண்பர்கள் இப்படிப் பலர் கூடிக் கலந்து குளிர்ந்து மகிழ்ந்து உண்கிறோம். இப்படியே சாவு வீட்டிலும் கூடி வருந்தித் துன்பத்தைப் பகிர்ந்து கொள்கிறோம்.

திருமணம், குடும்ப நிகழ்ச்சிகளில் சிறந்த இன்ப நிகழ்ச்சிகளுள் ஒன்று. சாவு, துன்ப நிகழ்ச்சிகளில் தலையாயது. இரண்டையும் யாரும் தனியே நடத்துவது இல்லை. கூடி ஆடி மகிழ்வதாக, கூடி அழுது வருந்துவதாக அவற்றை மக்கள் கொண்டாடுகிறார்கள்.

கூடிப் பகிரும் அனுபவத்தில் இன்பம் நிறைகிறது; துன்பமோ குறைகிறது. இது ஒரு வாழ்வியல் தத்துவம்; இறைவன் அருளோடு மானுட இனத்துக்கு அளித்த தலை சிறந்த நன்கொடை, கூடிப் பகிரும் வாழ்வில் இன்பம் குறையின் உலகம் வாழாது. அப்படிச் சிறிது எண்ணிப் பார்க்கலாம். அப்படி எண்ணிப் பார்க்கும்போது தோன்றும் உண்மை இதுதான் அதாவது, கூட்டு வாழ்வில் இன்பம் குறைவதாகத் தோன்றின் எவரும் எவருடனும் கூடி வாழ மாட்டார்; பகிர்ந்து உண்ணத் தயங்குவர் தனித்தே உண்பர்; உறங்குவர். மனைவி மக்களுக்குக்கூட எதுவும் கொடுக்க மாட்டார்கள். சமுதாயம் வாழாது; வளராது. கூடும்போது, கூடிக் கலந்து பகிர்ந்து அனுபவிக்கும் பொழுது இன்பம் பெருகுகிறது. நிறைகிறது என்பதால்தான் இன்று மானுடம் சமுதாயமாக வாழ்கிறது. கூடும்போது, கூடிக் கலந்து பகிர்ந்து வருந்தும்போது துன்பம் குறைகிறது, தேய்கிறது என்பதால்தான் மனிதன் ஒன்றுகூடிச் சமுதாயமாக வாழ ஆசைப்படுகிறான்.

பகிர்ந்து வாழும் வாழ்வு கொடை வாழ்வு; கொடுத்து வாழும் வாழ்வு. கொடுப்பதால் இன்பம் வாழ்கிறது; வளர்கிறது. அது மட்டுமன்று மானுட வாழ்வு நிலைப்பதும், நடப்பதும் கொடுக்கும் இயல்பு அவனிடம் அவளிடம் இருப்பதால்தான். இன்ப வாழ்வைச் சுவர்க்க வாழ்வு என்பர். துன்பம், தொல்லை நிறைந்த வாழ்வு நரக வாழ்க்கைக்குச் சமம்.

பாட்டி ஒருத்தி எப்போதும்போல் மொட்டை மாடியில் சாயங்காலம் பிள்ளைகள் எல்லாம் ஆடி ஓய்ந்து வீட்டிற்கு வரும்போது தன் பேரப் பிள்ளைகளுக்குக் கதை சொல்லத் தொடங்கினாள். பாலனும் வள்ளியும் மற்ற பிள்ளைகளுடன் மாடிக்கு ஓடிவந்து பாட்டிக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டனர்.

'என்ன கதை வேண்டும்?' என்றாள் பாட்டி. 'குரங்கு தராசு' கதை கேட்டான் பாலன். ''அது வேண்டா, ''வேடன்-புறா' கதை சொல் பாட்டி' என்றான் பாலனின் நண்பன். 'வீமன் நாகலோகம் போன கதை சொல் பாட்டி' என்றாள் ஒருத்தி.

''பாட்டி! பாட்டி! இன்றைக்கு எங்க ஆசிரியர் தருமபுத்திரர் சொர்க்கத்துக்குப் போன கதைசொன்னார்-சொர்க்கம் எப்படி இருக்கும் பாட்டி? அது எங்கே இருக்கு? அங்கே நாமெல்லாம் போக முடியுமா?'' என்றாள் வள்ளி.

''எங்கம்மா என்னை நரகம் நரகம்னு'' திட்டுறாங்க-சொர்க்க நரகக் கதை ஏதாவது சொல்லு பாட்டி என்றாள் வள்ளியின் தோழி.

சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருந்தான். மெல்ல இருள் சூழத் துவங்கிற்று. 'சொர்க்க நரகக் கதை ஒண்ணு சொல்றேன்'னு பாட்டி கதை சொல்லத் தொடங்கினாள்.

இப்பொழுது பாபநாசம் என்று ஒரு ஊர் இருக்கிறதல்லவா! அதன் அருகே பொதியமலை இருக்கிறது. அந்த மலையில் அந்தக் காலத்தில் நிறைய முனிவர்கள் தவம் செய்துகொண்டிருந்தாங்க..

'பாட்டி! பாட்டி! முனிவர் என்றால் யாரு பாட்டி?'' பாலன் குறுக்கிட்டான்.

'போடா.. அன்றைக்கு டி.வி. பார்க்கவில்லே' வசிஷ்டர் அவுங்கல்லாம் முனிவருங்க' நீ கதை சொல்லு பாட்டி' என்றாள் வள்ளி.

பாட்டி கதையைதொடர்ந்தாள். 'பொதிய மலையிலே தவம் செய்த முனிவர்களில் அருளானந்த அடிகள் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு நிறைய சீடர்கள். அவர்களுக்குள் மலையப்பன் ஒருவன். முனிவர், சீடர்களுக்கு மெய்ஞ்ஞானம் விஞ்ஞானம் எல்லாம் சொல்லிக் கொடுத்து வந்தார். ஒருநாள் சொர்க்கம் நரகம் பற்றிச் சொன்னார். பாவம் செய்தா நரகத்தில் துன்பப்பட வேண்டும்'' அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.



அப்பொழுது மலையப்பன் எழுந்து, கைகூப்பி வணங்கி, வாய்பொத்தியபடி, 'அய்யா! ரொம்ப நாளா கேட்டுத் தெரிஞ்சுக்கணும் என்று நினைத்தேன். இன்றைக்கு நீங்களே சொல்லிட்டிங்க. சொர்க்கம், நரகம் என்றால் எப்படி இருக்கும்! அவை எங்கே இருக்கிறது? நாம் போக முடியுமா?'' என்று கேட்டான்.

''மலையப்பா நீ கேட்டது எல்லாம் உனக்கு இன்றைக்கு இரவு தெரியும்' என்று முனிவர் சொல்லிவிட்டு அருவிக்கரைநோக்கித் தியானம் செய்ய போய் விட்டார்.

அன்று இரவு நல்ல நிலா. மலைப்பாறை ஒன்றில் படுத்தபடியே சொர்க்கம் நரகம் பற்றி நினைத்துக் கொண்டிருந்த மலையப்பன் அப்படியே தூங்கி விட்டான்.

''டேய் மலையா! வா நரகத்தைக் காட்டுகிறேன். சொர்க்கத்தையும் காட்டுகிறேன். நீயே பார்த்துக் கொள் என்று ஒரு குரல் கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தான். முனிவர் அவன் முன்னே போய்க்கொண்டிருந்தார். மலையப்பனும் பின் தொடர்ந்தான். இடையிடையே பஞ்சுச் சுருள்போல் அலைஅலையாக பல லோகங்கள் வந்து கொண்டிருந்தன. முனிவர் மேலும் மேலும் கீழே போய்க்கொண்டிருந்தார். தொடர்ந்து விட்டு விடாமல் நானும் அவர் பின்னேயே போய்க்கொண்டிருந்தேன். அதற்கு மேல் கீழே போக இடம் இல்லை என்ற நிலை வந்தபோது அவர் அங்கு நின்றார். அருகில் ஒரு கோட்டை தெரிந்தது. அதனை நெருங்கி என்னையும் உடன் அழைத்துக் கொண்டு அவர் சென்றார். நெருங்கிச் செல்லச் செல்ல, 'பசி பசி' தாகம் தாகம்' 'அய்யோ, அய்யய்யோ'.. என்ற கூக்குரல்களும் அழுகையும் காதில் கேட்டன. தாங்க முடியாதகொடிய சகதி நாற்றம் வீசியது. மூடியிருந்த கோட்டை கதவின் இடுக்கு வழியே மெல்ல என்னைப் பார்க்கச் சொன்னார். அங்கு இருப்பன, நிகழ்வன எல்லாம் மங்கிய ஒளியாயினும் நன்றாகத் தெரிந்தன,

மேசைகள் பல இருந்தன. ஒவ்வொரு மேசையிலும் வகை வகையான சோறுகள், வகைவகையான சிற்றுண்டிகள், வகைவகையான இனிப்புக்கள், வகைவகையான சுவை நீர்கள் வைக்கப்பட்டிருந்தன. தயிர்ச்சோறு, புளிச்சோறு, தேங்காய்ச் சோறு, காய்கறிச் சோறு, நெய்ச்சோறு இப்படிப் பலவகை சோறுகள். இட்டலி, தோசை, வடை, புட்டு, இடியாப்பம், பூரி, சப்பாத்தி, தேன்குழல், இப்படிப் பலவகை சிற்றுண்டிகள். அதிரசம், மைசூர் பாகு, பால்கோவா, லட்டு இப்படிப் பல இனிப்புக்கள். பால், பழச்சாறு, கரும்புச் சாறு, பாதாம் கீர், தேன் இப்படிப் பல சுவை நீர்கள். இவ்வளவு இருந்தும் எல்லோரும்

# உய்யும் நெறி அருள்

அன்பு அருணாசல அடிமை, திருப்பாதிரிப்புலியூர்.

தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் திருவிடைமருதூர்ச் சிவாலயம் பல வகையாலும் சிறப்புடைய ஒரு சிலவற்றுள் ஒன்றாகும். இவ்வாலயச் சிவலிங்கம் 'மகாலிங்கம்' என்ற திருப்பெயருடைய ஒன்றே இதன் சிறப்பிற்கோர் உதாரணம் ஆகும். மேலும் தமிழ்நாட்டில் அளவில்லாத சில, தலங்கள் உள்ளன. அவற்றுள்ளே ஏழாயிரத்தி நானூறும், அவற்றுள் ஆயிரத்தெட்டும், அவற்றுள் நூறும், அவற்றுள் அறுபத்தெட்டும், அவற்றுள் இருபத்துநான்கும் அவற்றுள் எட்டும் சிறந்தனவாகும. அவ்வெட்டு தலங்கள் ஆவன, திருக்கயிலாயம், திருவண்ணாமலை, காசி, திருக்காளத்தி, திருவாலவாய், ஸ்ரீசிதம்பரம், திருவாரூர், திருவிடைமருதூர் ஆக எட்டு.

இந்த எட்டு தலங்களுள் திருவிடைமருதூர் ஆதிசத்தியின் இருதயகமல பத்தியமாய் விளங்கா நிற்கும். அனாதியாகிய அந்தத் தலத்தை உமாதேவியாருக்குக் காண்பித்தற் பொருட்டு சிவபெருமான் திருக்கைலாயத்தினின்றும், முன்னொரு காலத்தில் எழுந்தருளினர். அவர் வருமுன்னமே அந்தக் கைலையங்கிரி அந்தத் தலத்தில் மருதவிருட்சமாகி நின்றது.

அந்தத் தலத்தில் அமர்ந்தருள்புரிந்து வரும் சிவலிங்கமாகிய மகாலிங்கப்பெருமானையும், அந்தத்தல விருட்சத்தையும் (மருத விருட்சம்) தரிசித்தாலும், கைலாயத்தைத் தரிசித்த பலன் உண்டாகும் என்றும், அதனை வலம் செய்தாலும், பணிந்தாலும், பூசித்தாலும் கைலைக்குச் செல்லுதல் போலாம். மேலும் அந்தத் திருவிடைமருதூரில் பிறந்தாலும், இறந்தாலும், கணப்பொழுது தங்கினாலும், அதன் மகிமைகளை படித்தாலும், அதைத் தரிசித்தாலும், நினைத்தாலும் எல்லாத்துன்பங்களினின்றும் நீங்கிச் சிவசாயுச்சியத்தை அடைவார்கள் என்று புராணவரலாறுகள் கூறுகின்றன.

இத்தகைய தெய்வீகம் சிறந்த திருவிடைமருதூர் என்னும் தலம் சமயகுரவர் நால்வர் திருப்பாடல்களையும், பட்டினத்தடிகள் முதலிய அருளாளர்களால் பாடப்பெற்ற சிறப்பினையும் உடையதாய் விளங்கி வருகிறது. சுந்தரர் அருளிய பதிகம் முழுவதும் ''உய்யும் வகை அருளாய்' என இறைவனை வேண்டும் வேண்டுகோளாகவே அமைந்திருக்கின்றது என்பதனை கவனிப்போம்.

### சுந்தரர் வரலாற்றின் சிறுகுறிப்பும், அவர் காட்டிய அருள்மொழியும் :

திருக்கயிலைமால் வரையில் சிவபெருமானுக்கு மலர் கொய்து, மாலை தொடுத்து அணிதலும், திருநீற்றை ஏந்தி நிற்றலுமாகிய அணுக்கத் தொண்டுகளைப் புரிந்த ஆலால சுந்தரர் மாதவம் செய்த தென்திசை வாழவும், தீதிலாத் திருத்தொண்டத் தொகை அருளிச் செய்யவும், இறைவன் திருவருளால் மண்ணுலகிற் பிறந்தார். (திருநாவலூர்) திருவெண்ணெய் நல்லூரில் இறைவனால அற்புதப் பழ ஆவணங்காட்டி ஆட்கொள்ளப்பட்டார். 'அர்ச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்பாடுக'' என்ற இறையாணைப்படி தலங்கள்தோறும் சென்று தேவாரத் திருப்பதிகங்கள் பாடினார். இறைவனுக்கு தோழராம் உரிமை பெற்றார்.

சுந்தரர் வாழ்வில் இறைவன் நிகழ்த்திய அருள் விளையாட்டுகள் பற்பல; இறையருள் ஒன்றே நம்பி அவற்றை ஏற்றருளிய சுந்தரர் இறைவனைப் பாடி பரவும் திருத்தொண்டை இடையறாமல் செய்து வந்தார் உலகமக்கள் அவற்றை அறிந்து கடைத்தேற வேண்டும் என்ற கருணையால் அத்திருப்பதிகங்களைச் சுந்தரருடன் வந்த அடியவர்கள் எழுதிக் கொடுக்கும் பணியைச் செய்தனர். இவ்வாறு சுந்தரர் பெருமான் பாடிய பதிகங்கள் நாமுய்ய நாடுய்ய, நமக்குக் கிடைத்துள்ளன.

இடைமருதுறையும் இறைவனை வழிபட்டுச் சுந்தரர் பாடிய திருப்பதிகம் 'உய்யும் நெறி' வேண்டும் தனிச் சிறப்புடைய திருப்பதிகமாகும். இத்திருப்பதிகத்தில் பல்வகை உவமைகளைக் கையாண்டு தம்மை இழித்துரைத்துக் கொண்டுபாடும் பாடல்கள் கற்பார் நெஞ்சைக் கனியச் செய்யும். (1) உதாரணமாக கழுதை ஒன்று குங்குமம் சுமக்கிறது. உயர்ந்த மணப் பொருளைச் சுமக்கும் கழுதைக்கு அக்குங்குமத்தின் பெருமை தெரியாது தன்னிடம் வைத்த சிறந்த பொருளைச் சுமக்கத்தான் தெரியுமே தவிர அதன் சிறப்பு அறியும் ஆற்றல் அதற்கிலலை. அது போல இறைவா! இம்மானிட தேகத்தைப் பெற்றுள்ள எனக்கு உன்பெருமை தெரியாது. பயன் ஏதுமின்றி வாழ் நாட்களை வீழ் நாட்களாக்கி விட்டேன் எனக்கும் நற்கதி பிறக்குமா? ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த வழிதான் திருவிடைமருதூரிலே இருக்கின்ற உன்னைக் கதி என்று சரண் அடைகிறேன் என்று தம்மை இழித்துக் கூறி தம்மனத்தை விரித்துக் கூறியிருக்கின்றார் சுந்தரர். அப்பாடலைக் காண்போம்.

''கழுதை குங்குமந்தான் சுமந்தெய்த்தால்  
கைப்பர்பாழ்புக மற்றதுபோலப்  
பழுதுநானுழன் றுள்தடு மாறிப்  
படுசுழித்தலைப்பட்டனன் எந்தாய்

'பசி பசி' என்று கத்திக் கொண்டும் 'தாகம் தாகம்' என்று அழுது கொண்டும் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டும் இருந்தனர்.

''ஏன்?'' என்று எனக்குத் தெரியவில்லை. வியப்பாக இருந்தது. எடுத்துத் தின்ன வேண்டியது தானே! எடுத்துக் குடிக்க வேண்டியது தானே!' என்று முணுமுணுத்துக் கொண்டே முனிவரை ஏறிட்டுப் பார்த்தேன். மௌனமாக அவர்கள் கைகளை உற்று நோக்குமாறுசுட்டினார் முனிவர். அப்போதுதான் அந்த உண்மை எனக்கு புலப்பட்டது.

அவர்கள் கைகள் எல்லாம் நீட்டுவாதத்தால் மடக்கமுடியாமல் நோயுற்றிருந்தன. நீட்டிய கைகள் நீட்டியபடியே இருந்தன. கைகளால் தோசையை, இட்டலியை, வடையை எடுக்க முடிந்தது. ஆனால் கையை மடக்கித் தத்தம் வாயருகே வைக்க முடியவில்லை. அதனால் கோபங்கொண்டு தோசையை, இட்டலியை, வடையைக் கீழே போட்டு மிதித்தனர்; வாய் விட்டு அழுதனர். அப்படியே பால் குவளையை, பழச்சாற்றுத் தம்ளரை, தேன் கிண்ணத்தை அவர்களால் எடுக்க முடிந்தது. ஆனால் குடிக்க முடியவில்லை. கீழே கொட்டிவிட்டுக் கூக் குரலிட்டுத் திட்டினர். கீழெல்லாம் சகதியாகிப் போய், கொசு, ஈ, மொய்க்கலாயின. நிற்கவும் முடியாமல், அமரவும் முடியாமல், படுக்கவும் முடியாமல் பசியாலும் தாகத்தாலும் அவர்கள் பரிதவித்தனர்.

'பார்த்தது போதுமா! வா சொர்க்கத்தை காட்டுகிறேன்.' என்று முனிவர் மேல் நோக்கிப் போனார். நானும் தொடர்ந்தேன். மேலே மேலே முனிவர் போய்க்கொண்டேயிருந்தார். நானும் விடாமல் தொடர்ந்தேன். யாழோசை மெல்ல வந்துகொண்டிருந்தது. இனிய மணம் காற்றில் பரவி வந்து எங்களை வரவேற்றது. முனிவர் நின்றார். அங்கே ஒரு கோட்டை தெரிந்தது. அதன் கதவு திறந்தே இருந்தது. அருகில் சென்றேன். 'உள்ளே போகாதே. வெளியில் நின்றபடியே நிகழ்வனவற்றைப் பார்!என்று முனிவர் சைகையால் எச்சரித்தார். நானும் வெளியில் நின்றபடியே திறந்து கதவின் வழியே உள்ளே நிகழ்வனவற்றை சற்று நோக்கினேன்.

நரக மக்களின் வாதநோயுற்ற கைகளை நினைத்துக் கொண்டு இந்த சொர்க்கத்து வாழ் மக்களின் கைகளையும் கவனித்துப்பார்த்தேன். 'அய்யோ! அய்யய்யோ!' இவர்கள் கைகளும் நீட்டு வாதத்தால் நோயுற்றிருந்தன. ஆனால் எல்லாரும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஒருவர் கூட பசி தாகம் எனக் கூறவில்லை. எனக்கு வியப்பாக இருந்தது. முனிவரைப் பார்த்தேன். சற்று நேரம் பொறுமையாக இருக்குமாறு பணித்தார். சிறிது நேரத்தில் எல்லோரும் சாப்பிடத் துவங்கினர். ஒவ்வொருவரும் தோசை, இட்டலி எனத் தங்களுக்குப் பிடித்த ஒவ்வொரு உணவுப் பொருளை மகிழ்ச்சியோடு எடுத்தனர். எனக்கு மிகத் துயரமாக இருந்தது.

'அய்யோ! இவர்கள் கைகளும் நீட்டுவாதம் உள்ளவாயிற்றே! எப்படி உண்பர்? என்று என் மனம் ஏங்கியது.

என்ன ஆச்சரியம்! என் கண்களால் நம்பவே முடியவில்லை. ஒரு பெரிய ஆற்புதம நிகழ்ந்தது. கைகளின் நோய் ஒன்றும் நீங்கிட வில்லை. நீட்டிய கைகள் நீட்டியபடிதான் இருந்தன. ஆனால் அந்த நீட்டிய கைகளில் இருந்த உணவைத் தம் வாய்க்குக் கொண்டுவர முயன்று வருந்தாமல் மற்றவர் வாயில்வைத்து ஊட்டி மகிழ்ந்தனர். சுவை நீரைப் பிறர்வாயில் ஊட்டி அவர் பருகி மகிழ்வதைப் பார்த்து மகிழ்ந்தனர். இப்படியே தத்தம் கையிலுள்ளதை இன்னொருவருக்கு ஊட்டி அனைவரும் உண்டு, அனைவரும் பருகி அனைவரும் மகிழ்ந்தனர்.

நான் முனிவரைப் பார்த்தேன். அவர் புன்னகைத்தார். தாமரை மலர் மலர்ந்து மணங்கமழ்வதுபோல் இருந்தது. மெல்லிய கதிரொளித் தோன்றி எங்கும் பரவிப் பரவசம் ஊட்டியது. 'ஓம்! ஓம்! ஓம்! மனிதா கொடு- கொடுப்பதே இன்பம்-கொடுப்பவர் வாழு மிடமே சொர்க்கம்..ஓம்! ஓம்! ஓம்!..., என்ற ஒலி கேட்டது.

சுள்ளென்று உடம்பில் சூடு பரவுவதை உணர்ந்தேன். கண் விழித்தேன். மலைப் பாறையில் படுத்திருந்தபடியே எழும் செங் கதிரவனையும், வீழ்கின்ற வெள்ளருவியையும் கண்டேன். 'கொடுப்பதில், பகர்வதில் இன்பம் உள்ளது. அதுவே சுவர்க்கப் பாதை; தடுப்பதில் தனக்கு மட்டுமே என மறைப்பதில் துன்பம் உள்ளது; அது நரகப் பாதை என்று என் நெஞ்சில் நினைவு ஒன்று எழுந்தது,,.

என்று பாட்டி கதையை முடித்தாள். வள்ளி இதுவரை தான் மறைத்து வைத்திருந்த முறுக்கை அனைவருடனும் பகிர்ந்து கொண்டாள். பாலனும் தான் யாருக்கும் தெரியாமல சட்டைப் பைக்குள் சுருட்டி வைத்திருந்த பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்த கற்கண்டை உடைத்து எல்லோருக்கும் கொடுத்தான். பாட்டியும் ஒரு துண்டு தின்று விட்டுச் 'சொர்க்கம் போலே இனிக்கிறதே,! என்றாள்.

ஆம் கொடுக்கும்போது, பகிர்ந்து கொள்ளும்போது இன்பம், சொர்க்கம் நம்மிடமே, நம்மைச் சுற்றியே திகழ்கிறது. எல்லாம் எனக்கே, வேறு எவருக்கும் எதுவும் தரமாட்டேன் என்று மறுக்கும்போது, மறைத்து வாழும்போது நம்மை அறியாமல் நாம் துன்பத்திற்கு உள்ளாகிறோம். நரகத்தை நோக்கி நடைபோடுகிறோம்.

பகுத்துண்டு பல்லூர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.''

அழுது நீயிருந்தென் செய்தி மனனே!
அங்கணா அரனே யென பாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடை மருதுறைஎந்தை பிரானே.''

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

வாழ்வு அழியும் இயல்புடையது. பார்ப்பதற்கு நிலையுடையது போலத் தோன்றும் எனினும் நிலையாமை அதனுடன் பிறந்த தன்மையுள்ளது. பனிக்காலத்தில் புல்லின் நுனியில் பனித்துளிகள் பல தோன்றி தேங்கியிருக்கும். காலை இளங்கதிர் தோன்றுகையில சிறு முத்துகள் போல பனித்துளிகள் பளிச்சிடும். கதிரொளி காயக்காய மறைந்தொழியும். அது போலவே வாழ்க்கை புகழும், போற்றுதலும் உடையதாயப் பளிச்சிடும். காலச் சக்கரச் சுழற்சியில் வாழ்வு அழிகிறது. வாணாளை வீணாளாகப் போக்கி விட்டோமே என்று வருந்தி இனியாகிலும் பற்றற்றவனாகிய அவன் திருவடியைச் சிந்தித்தலே வழியென 'உய்யும் நெறி காட்டி என்னையாட்கொள்க'என்று கூறியிருக்கின்றார்.

''புல்நுனிப் பனிவெங்கதிர்கண்டாற்
போலும் வாழ்க்கை பொருள்நிலைநாளும்
என் எனக்கினி இற்றைக்கு நாளை
என்றிருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்னமே உன்சேவடி சேரா
மூர்க்கனாகிக் கழித்தனகாலம்
இன்னம் என்றனக்கு உய்வகை அருளாய்
இடைபருதுறை எந்தைபிரானே.''

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

இளமை உடையராய் இன்பம் தந்த மகளிர் பின்னும் இளமையுடையராயிருந்து இன்பம் நல்குவர் எனக்கருதும் மக்களின் மனமயக்கத்தை ஒருமுறை குலை தள்ளிப் பழுத்த வாழை மீண்டும் குலை தரும் என்று கருதுவோர் மனநிலையைத் தானே காட்டுகிறது என்றும், அது போன்ற அறியாமை உடையவர்களும் உலகில் இருக்கின்றார்களே! என்று பாடியிருப்பதுடன், தம்மை யிழித்து-நான் உனக்குச் சுமையானேன், நன்மைகளை அழித்துத் தீமைகளைத்தான் செய்தேன், விழிப்படைந்து உண்மைப் பொருளாகிய உன்னை அறிந்தேன். வாழ்க்கை இழியுடையது எனபதனை உணர்ந்தேன். ''உய்யும் நெறி அருள்'' என்று கூறிச் சுந்தரர். வேண்டும் வேண்டுகோள் நமக்குரிய நல்ல அறிவுரையாகும்.

நல்வினை, தீவினைகளைப் பெருக்கிக் கொண்டு மகளிரோடு மயங்கிநின்று மெய்ந்நூலறிவு பெறாது கொடுமைகள் செய்து திரிகின்றேன். பாவங்களையே விரும்பிச் செய்கின்றேன்; பெற்ற செல்வத்தை மற்றவர்களுக்குச் கொடுக்கும் குணம் இலேன்; பகைமை எனும் தீயகுணத்தை விட்டிலேன் என்று தம் நிலையை உணர்ந்து சுந்தரர் பாடிய பாடல்கள் எல்லாம் நம்மனோர் பொருட்டுப் பாடிய பாடல்கள் அல்லவா?

## தேவாரம் தந்த விநாயகர்

**திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள்- இம் மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் எனப்படும்.**

**இவைகள் ஓலைச் சுவடிகளாய் சிதம்பரம் கோவில் அறையில் பூட்டப்பட்டுக் கிடந்தன.**

**நம்பியாண்டார் நம்பிக்கு அச்சுவடிகள் இருக்கும் இடத்தைக் காட்டி நாம் கற்று மகிழத் தேவாரம் வெளிப்படுத்தியவர் மூலமுதற் கடவுளான விநாயகரே ஆவார்.**

''ஏழை மானுட இன்பினை நோக்கி
இளையவர்வலைப்பட்டிருந்தின்னம்
வாழைதான் பழுக்கும் நமக்கென்(று)
வஞ்சவல்வினையுள் வலைப்பட்டுக்
கூழை பாந்தர்தம் செல்கதிப்பக்கம்
போதமும் பொருளொன்றறியாத
ஏழையேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைமருதுறையெந்தை பிரானே''

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சுந்தரர் தம் கடந்தகால வாழ்வினையும், இடைமருதுறையும் இறைவனைக் காணாது கழித்த காலத்தையும், எண்ணி எண்ணிக் கவல்கின்றார். ஒரு மணத்தைச் சிதைத்த அவனைக் கொண்டே இரு மணம் புணர்ந்து, இன்ப வாழ்வு வாழ்ந்த அவர் இறைவன் அருளாளனாம் தன்மையை எண்ணி எண்ணிப் பார்க்கின்றார். அவர்தம் இளமையில் அவரை ஆட்டிப் படைத்த ஐம்புலத்தார் செயல்களையும், அவற்றின் வழியே சிந்தை திரிந்து நின்ற நிலையினையும், பிறவற்றையும் நினைக்கின்றார். அந்த நிலையில் கடந்த செயல்களுக்கு அவற்றின் பயன்களிலிருந்து தப்பி, உய்தி பெறத்தக்க வழி உண்டோ? என உள்ளம் உளைகின்றார். ஆம் உய்தி உண்டு என்று அவர் உள்ளுணர்வு உரைக்கிறது. வாய் பாடுகிறது. மக்கள் துன்பத்தை நீககி 'உய்யும் வழி' காட்டுபவர் இடைமருதுறையும் மருதவாணரே என்று தாம் உணர்ந்த உண்மையை வையம் உய்யப்பாட்டாக வழங்குகின்றார் சுந்தரர். கீழ்க்காணும் பாட்டினைக் கவனிப்போம்

''கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள்தன்னைக்
குற்றம் செற்றம் இவைமுதலாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும்
வேண்டில் ஐம்புலன்என்வசம் அல்ல
நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்தமர்நரகத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே.''

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

விரும்புகின்றனர். மண்ணில் மக்கள் இறைவனைப் புகழ்ந்து திருக்கோலத்தைக் காண ஆவல் கொள்கின்றார்கள். ஆனால், திருமூலரோ இறைவனை உயிருக்குள் கண்ணிலுள்ள கருமணியைப் போல் காண்கின்றார். இறைவன் மண் முதலாகிய ஐம்பூதக் கூட்டங்களிலே பரந்து நிற்கின்றான். அதே நேரத்தில், உயிரின்கண் நிற்கின்றான். உயிரை ஆட்டுவிக்கின்றான். இந்த நிலைமை திருமூலர் உள்ளத்தில் எப்படி விளங்குகின்றது தெரியுமா? இறைவன் உயிருடன் கலந்து நிற்கும் தன்மை, நீரில் கலந்த பால்போல் இருக்கின்றது என்று திருமூலர் கூறுகின்றார் அத்துடன் அவர் நிற்கவில்லை. நீரில் பால்போல் கலந்து நிற்பது ஓர் நுட்பமான நிலையாகும். உயிருக்குயிராக இறைவனும் கலந்து நிற்பது அதிநுட்பமான நிலையாகும். இந்த உண்மையைக் கண்டு கொண்டால் உள்ளத்திலே எழும் பேரின்பத்தைப் பற்றி விவரிக்க இயலுமா? அந்த உணர்வினை திருமூலர் 'சோராமற் காணும் சுகம்'' என்கின்றார். இதை ''அறிந்தேனே'' என்று அவர் கூறுவது அவர் பெற்ற அனுபவத்தைக் குறிக்கும். இந்த அனுபவம் நூலறிவால் ஏற்பட்ட அனுபவம் அல்ல. இந்த அனுபவம் இறைவனுடைய பேரருளால் உள்ளத்தே தோன்றி, எழுந்து, நிரம்பி நிற்கும் அனுபவமாகும்.

''ஆரும் அறியாத அண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகம் அறிந் தேனே''
(திருமந்திரம்.......450)

இந்த அனுபவத்தைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார் ஆவார். ஒன்று இறைவனை திருமூர்த்தமாக தரிசிக்கலாம்; மற்றொன்று அன்பினால் இறைவனை நமக்குள் எண்ணி, அனுபவித்து இன்பமடையலாம். ஆனால், அகக்கண் கொண்டு பார்ப்பவருக்கு இறைவன் அவர்களுடைய சித்தத்தில் சோதிமயமாகக் காட்சியளிப்பான் என்று கூறுகின்றார்;

''நாண்பார்க்கும் காணலாம்
தன்மையனே; கைதொழுது
காண்பார்க்கும் காணல்ஆம்;
காதலால் காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே
தோன்றுமே, தொல்உலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்'',
(அற்புதத் திருவந்தாதி)

''.............................— இதுஅன்றே
மின்னும் சுடர்உருவாய் மீண்டு ஆய்என்
சிந்தனைக்கே
இன்னும் சுடர்கின்றது இங்கு''
(அற்புதத் திருவந்தாதி)

இறைவனாகிய திருவிளக்கு உள்ளத்தின் நின்று, சுடர்விட்டுப் பிரகாசித்து பல ஆற்றல்களைப் புரிவதை நமச்சிவாயமாகிய ஐந்தெழுத்தென உணர்ந்த திருநாவுக்கரசர் இவ்விளக்கின் அருமையைப் பற்றிப் பின்வருமாறு பாடுகின்றார்;

''இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே''
(நமச்சிவாயத் திருப்பதிகம்)

இறைவனை ''உள்ளத்து ஒடுங்கும் புறத்துளும் கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தி'' என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இதே கருத்தை ''உள்ளத்தினுள்ளே உளப்பல தீர்த்தங்கள்'' ''தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்'', ''தேயமும் நாடும் திரிந்துஎங்கள் செல்வனைக் காயம் இந்நாட்டிடை கண்டு கொண்டேனே'' போன்ற திருமந்திர அடிகள் வெளியிடுகின்றன.

இந்தக் கருத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டம் நமக்குஇப்பொழுது வந்துவிட்டது. நமக்கு முகம் இருக்கின்றது. முகத்தில் இரு கண்கள் இருக்கின்றன. இந்த முகத்தின் கண்களால் நாம் பார்க்கின்றோம். காணும் வெளிப்புறக் காட்சிகள் நமது மனதை வந்தடைந்து உள்ளத்தில் அனுபவங்களை வாரி வழங்குகின்றன. அறிவைத் தருகின்றன. இந்த அறிவு முடிவான அறிவு அல்ல. நிலையான அறிவை, பேரறிவை நாம் பெறவேண்டும். அதற்கு முகத்தின் கண்களால் மட்டும் பார்த்தால் போதாது. நமக்கு உள்ளும் புறமும் உண்டு. உள்ளமாகிய அகத்திற்கும் காணும் சக்தி உண்டு. அந்தச் சக்தி நம்மிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இறைவனுடைய அருளே. அவனுடைய அருளாலேயேதான் இந்த மறைப்புத்திரை நீக்கப்பட வேண்டும். புறத்திலுள்ள கண்கள் அறிவு பெறுவது புறத்தே உள்ள ஒளியால். அகத்திலுள்ள கண்கள் இப்பொழுது இறைவனுடைய அருளால் ஒளிபெற வேண்டும். எனவேதான் திருமூலர்

''முகத்திற் கண்கொண்டு காண்கின்ற
மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்''
(திருமந்திரம்..2994)

என்கிறார்.

இந்த அகத்தின் வழி என்பது என்ன? முதலில் இந்திரியங்களையும் புலன்களையும் அவை வழி போகாது தடுத்து நிறுத்த வேண்டும். மனதை ஒடுக்கி, சித்தத்தை அடக்கி, புத்தியை நெறிப்படுத்தி, உலகப் பொருள்கள் மீது உள்ள பற்றினைக் குறைத்துக் கொண்டு சரியை, கிரியை, யோகம் போன்ற பாதைகளால் இறை சிந்தனையையும், நாட்டத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இறைவனை அன்புற நாட வேண்டும். இறைவனுடைய பேரறிவு, பேராற்றல் இவற்றின் முன்பு உயிரினுடைய சிற்றறிவிற்கும், சிறுஆற்றலுக்கும் இடமில்லை என்கின்ற அடக்க உணர்வை வளர்க்க வேண்டும். சகல சீவராசிகளின் பால் ஆழ்ந்த அன்பினைச் செலுத்தி தற்போதம் என்கின்ற தன் நினைப்பு வலிமை இழக்கும் வகையில் நம்முடைய வாழ்வினை அமைத்துக் கொள்ள வேண்டும். இவையே அறம் என்றும், தவம் என்றும் சொல்லப்படும். இந்தப் பாதைகளிலே தீவிரமாக சாதகம்

செய்யச் செய்ய உடல் தான் என்கின்ற நினைப்பு குறைந்து. உயிரைப் பற்றிய அறிவு மிகும். ஆனால் அத்துடன் நின்றால் போதாது. உயிர் இறைவனாகாது. இறைவன் உயிருக்குயிராய் இருந்தாலும் உயிர் என்றும், எக்காலும் இறை ஆகமாட்டாது. தன்னையே உடல் என்று நினைக்கும் பொழுதும், உயிரையே இறைவன் என்று கருதும்போதும் நம்மை அறியாமை என்கின்ற இருள் மூடிக் கிடக்கின்றது. இறைவனுடைய அருளால் நம்முடைய வினைகளின் வலிமை நீங்கி மலப்பரிபாகம் ஏற்படும் போது உள்ளத்தில் ஒளி தோன்ற ஆரம்பிக்கின்றது. உடலைப் பற்றிய நினைவுகள் அகன்று விடுகின்றன. ஞாயிறு எழும்பொழுது இருள் நீங்குவது போல உண்மை புலரத் தொடங்குகின்றது. இதைத்தான் ''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி'' என்பார் மாணிக்கவாசகர். உலகை நோக்காது நிற்கும் நிலை உண்மை நிலையாகும். இந்த உண்மை நிலையில் இறைவனுடைய பொன்னடிகள் காணப்படுகின்றன. மலங்களாகிய களிம்பு இறைவனுடைய பேரருளால் முழுமையாக துளைத்து எடுக்கப்படுகின்றது. இந்த இயக்கமும் உள்நின்றே நடக்கின்றது. இதை நடத்துவது ஆனந்தக்கண் என்கின்றார் திருமூலர். இதுவே அருட்கண் எனப்படும். இதையே அறிவால் பார்க்காமல் அருளால் பார்க்கும் நிலை என்றும் அருளாளர்கள் கூறுவார்கள். இந்த அருமையான இயக்கத்திற்கு மூலகாரணமாக இருப்பது இறைவனுடைய அருட்சக்தி. உயிர்களை உய்விக்கும்பொருட்டு, பல பிறவிகளில் உடல்களைச் சேர்த்து, அவற்றை நடாத்திச் சென்று பின்னர் அருள்பாலித்து அவையோடு ஒட்டியிருக்கும் மலங்களை தனது அருளால் நீக்கி, தனது திருவடியை என்றும் சிந்தையுள்ளே நிலைக்கச் செய்வதும் இறைவனுடைய அருட் செயலே ஆகும் உயிர் பளிங்கு போன்றது. இதுவரை விஷய அனுபவங்களைச் சார்ந்து இருந்தது. இனிமேல் இறை அனுபவத்தைச் சாரும். இதை 'பளிங்கில் பவழம் பதித்தான் பதியே'' என்கிறார் திருமூலர்.

''விண்ணின் றிழிந்து வினைக்கீடாய்
மெய்கொண்டு
தண்ணின்றதாளைத் தலைக்காவல்முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே''

(திருமந்திரம்.....113)

இதுவே அருள் நிலை அறிவு நிலை. இருள் நீங்கி உள்ளொளி பரவிய நிலை. இந்த நிலையில் உடல் நினைவு மறையும். பிறப்பு அறுக்கப்படும். இவ்வொளி நிலையில் இறைவனுடைய உண்மை உணரப்படுகின்றது. இறைவனுடைய ஆற்றலால் அக்னியும், சூரியனும், சந்திரனும் ஒளி பெறுவது உண்மைதான். அதேபோல இறைவனுடைய அருளால் உயிரும் மலம் நீங்க சிவ ஒளியைப் பெற்று விளங்குகின்றது.

''விளங்கொளி யங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி பெற்றன சோதி யருள
வளங்கொளி பெற்றதே பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்துநின் றானே''

(திருமந்திரம்.....:2683)

## வாசகர் எண்ணங்கள்

திருமந்திரச் செம்மல் அருளாளர் திருமிகு **டி. வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.** அவர்கள் எழுதி வரும் தொடர் கட்டுரையைத் தவறாமல் படித்து மகிழ்ந்து வருகின்றேன். இறைவன் தன்னைக் கொடுத்து, அடியார் தம்மை ஆட்கொள்ளும் பெற்றியைத் திருமந்திரச் செம்மல் விவரித்திடும் பாங்கு என் உள்ளத்தை நெக்குருகச் செய்தது.

— வெ. நாராயணசாமி, தஞ்சாவூர்.


திருவல்லிக்கேணி அருள்மிகு எல்லம்மன் மகிமையை விளக்கும் கட்டுரையைப் படித்ததும் அம்மனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு, குடும்பத்தினரோடு போய் தரிசித்து மகிழ்ந்தேன். அம்மனின் அருள் தோற்றம் மிகுந்த உள்ள பரவசத்தை உண்டாக்கியது.

— எஸ். சுப்பிரமணி, முத்துக்காளத்தி தெரு
திருவல்லிக்கேணி.

இதுவே தெளிந்த நிலையுமாகும். சித்தம் என்றும் சிவன் என்றும் வெவ்வேறு நிலைகள் இல்லை என்று திருமூலர் கூறி, மனதிலே தெளிந்த நிலை அடைந்தவர்களுக்கு சித்தத்திலே சிவனும் வெளிப்படும் என்று கூறுகின்றார். (திருமந்திரம்.....2853) இந்த தெளிந்த சித்தத்தில் மெய்யுணர்வு ஏற்படும். இந்த மெய்யுணர்வைப் பெறும் உயிரானது மலம் நீங்கியதாக ஒளி நிலையைப் பெறும். தன்னுள் இறைவன் உள்ளான் என்கின்ற நிலையும் மறையும். சிவத்தை உள்ளத்தில் கொள்ளுதல் ஒரு கட்டம். சிவத்தில் தான் மறைவது அடுத்த கட்டம். மெய்யுணர்வு பெற்று எல்லாமும் இறைவன் என்கின்ற உணர்வால் அழுந்தப்பட்டு, அந்த உணர்வையே தங்களது அடக்க நிலை என்று கருதி சிவன் செயல் யாவையும் நோக்கி நின்று, சிவமாய் எங்கும் தாமாகி இருக்கும் நிலை ஓர் ஒப்பற்ற பேறாகும் என்பார் திருமூலர். ''உய்யவல்லார்கட்கு ஒடுக்கம் பிரணவம்'' என்பது திருமந்திரம். சிவமாகிய பேரொளியில் உயிராகிய சிற்றொளி சேர்ந்துவிடும். 'சுத்த வெளியில் சுடரில் சுடர் சேரும்' (திருமந்திரம்..134) குற்றமற்ற பாலினில் நெய் கலந்து நிற்பது போல் எல்லையற்ற அகண்ட இறை வியாபகத்தில் உயிர் கலந்து நிற்கும். பிரம்மனும் திருமாலும் அகண்ட சோதியைக் கண்டு அதன் முடியையும், அடியையும் காணாமல் தோல்வியுற்றார்கள். அந்தச் சோதிக்குள்ளே அவர்களால் புக இயலவில்லை. அவர்களுடைய ஆணவச் செருக்கின் காரணமாக அந்தச் சோதியும் அவர்களைத் தன்னுள் சேர்க்கவில்லை. ஆனால் எங்கும் வியாபகமாக நின்று, அறியாமை இருளைப் போக்கவல்ல இறைவனாகிய ஒப்பற்ற அகண்ட சோதியில் தம் வாழ்நாளிலேயே சேர்ந்த பேறுபெற்றவர் சீர்காழிப் பிள்ளையார் திருஞானசம்பந்தர் ஆவார்.

(தொடர்ந்து வரும்).

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M. A., Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



மயிலை அருள்மிகு கற்பகாம்பாள் ஆலயத்தில் 15-8-92 சுதந்திரத் திருநாள் அன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்புற நடை பெற்றது.மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு அழகு திருநாவுக்கரசு அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு டி. எம். ரங்கராஜன். எம்.எஸ்சி.,பி.எல்.. ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு கு. சிதம்பரம், பி.ஏ,. ஆகியோர் உடன் உள்ளனர்.



மயிலை அருள்மிகு கற்பகாம்பாள் ஆலயத்தில் 15-8-92 சுதந்திரத் திருநாள் அன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்புற நடைப்பெற்றது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு அழகு திருநாவுக்கரசு அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு டி.எம்.ரங்கராஜன்,எம்.எஸ்சி.பி.எல். ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு கு. சிதம்பரம், பி.ஏ., ஆகியோர் உடன் உள்ளனர்.